விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valamporii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 22 வியாழக்கிழமை (04.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047



### தடைகளைத் தகர்த்தெறிந்து அடைமழைக்கும் மத்தியில்

# தமிழர்களின் அகிம்சைப் போராட்டம் பொத்துவிலிலிருந்து நேற்று ஆரம்பம்

- நேற்று முதல் நாள் வெற்றிகரமாக முடிவடைந்த போராட்டம் இன்று மீண்டும் ஆரம்பமாகும் என போராட்டக்காரர்கள் அறிவிப்பு.
- அரசுக்கு எதிராக விண்ணதிர கோஷங்கள்.
- நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டோரைத் தேடி பொலிஸார் தீவிர விசாரணை.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மூன்று நாள் தொடர் போராட்ட பேரணி நேற்றுக் காலை கொட்டும் மழைக்கும் மத்தியில் பொலிஸாரின் தடைகளை தாண்டி அம்பாறை பொத்துவிலில் இருந்து ஆரம்பித்தது.

எனினும் குறித்த போராட்டத்தில் கலந்துகொள்ள குறிப்பிட்ட சிலருக்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் பொலிஸார் சில பகுதிகளில் வீதித் தடைகள் அமைத்து, அவற்றை கடக்கும் போராட்டக்காரர்களில் நீதிமன்ற தடை விதிக்கப்பட்டோர் உள்ளனரா? என்பது தொடர்பில் சோதனை செய்தனர்.

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், தமிழ் தேசிய கட்சிகளின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் இந்த தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இடம் பெறும் பௌத்த மயமாக்கல், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை கண்டித்து பொத்துவில் 19

## யாழில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளுக்கு தடை

### யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழிப் போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இன்று முதல் நான்கு நாட்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் நேற்று புதன்கிழமை 19

## கறுப்புத் துணி கட்டி உறவுகள் போராட்டம்



(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் 19

## தமிழரின் போராட்டத்தில் முஸ்லிம்களும் பங்கேற்பு




19

## ஆறுகால்மடத்தில் வீடு உடைத்து 41 பவுண் நகை கொள்ளை

### நகரிலுள்ள நகைக் கடை தொகுதியில் 3 மணி நேரத்தில் திருடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஆறுகால் மடம், பழம் வீதியில் வீடுடைத்து 41 பவுண் தங்க நகைகளை திருடிய திருடன் 3 மணித்தியாலத்தில் 19

### தமிழர்களின் பேரணி

## மன்னார் மாவட்டத்துக்குள் நுழைய நீதிமன்றம் தடை

(மன்னார்)

கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பகுதியில் இருந்து பொலிகண்டி வரையில் தமிழர்களின் நடைபவனி இடம்பெற்று வருகின்ற 19

## மன்னாரில் விபத்து

### இளைஞன் பலி

(மன்னார்)

மன்னார் - அடம்பன் பகுதியில் இடம் 19

## அகிம்சை போராட்டத்துக்கு தடை கோரி விண்ணப்பம்

### அறிக்கை கோரி வழக்கை ஒத்திவைத்த மல்லாகம் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழி 19

## தமிழரின் அகிம்சை போராட்டத்திற்கு வர்த்தக சமூகம் ஆதரவு

### யாழ். வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்களின் அகிம்சை போராட்டத்திற்கு வர்த்தக சமூகம் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். வணிகர்கழகம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இன ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் மாபெரும் கவனயீர்ப்பு பேரணிக்கு வர்த்தக சமூகம் சார்பாக எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெப்ரவரி 3 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியானது மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஊடாக பொலிகண்டிப் பகுதிக்குச் சென்று 6 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நிறைவுபெற இருக்கின்றது.

இப் பேரணியானது 6 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ். நகரை வந்தடையும் போது யாழ். நகர வர்த்தகப் பெருமக்கள், பொதுமக்கள் எல்லோரும் அப் பேரணியில் கலந்து தங்கள் பேராதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

## வீராப்புப் பேசி உலக நாடுகளை பகைத்துக் கொள்ளாதீர்கள்

### அரசுக்கு சஜித் அறிவுரை

(கொழும்பு)

வீராப்புப் பேசி உலக நாடுகளைப் பகைத்துக்கொள்ளாமல், மதிநுட்பத்துடன் செயற்படும் பொறிமுறையை அரசு கையாள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: "சர்வதேச சமூகத்துடன் இரு தரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதாரரீதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இராஜதந்திர நடவடிக்கை அமைய வேண்டும்.

அதேவேளை, எமது நாட்டுக்குரிய தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதைக் கடுமையாக எதிர்க்கின்றோம். எனினும், நாட்டுக்குள் அபிவிருத்தி இடம்பெறுவதற்கு நேரடி வெளிநாட்டு முதலீடு அவசியம்.

எனவே, உள்நாட்டு வளங்களைப் பாதுகாத்துக்கொண்டு, வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதற்கான உபாயமார்க்க பொறிமுறையை உருவாக்க முடியும். நாட்டின் தனித்துவம், இறையாண்மை ஆகியவற்றை பாதுகாத்துக்கொண்டு இதனைச்செய்ய முடியும். மாறாக இனவாதம், வீராப்புப் பேசி உலக நாடுகளைப் பகைத்துக் கொள்வதில் பயன் இல்லை.

எமது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட முடியும். அதற்கு மதிநுட்பம் அவசியம். அதற்கான வேலைத் திட்டம் எம்மிடம் உள்ளது" - என்றார். (ம-03)

## இ.போ.ச பஸ் சாரதி மீது புறாப்பொறுக்கியில் தாக்குதல்

(கரணவாய்)

இ.போ.ச பேருந்து சாரதி ஒருவர் தனியார் சிற்றூர்தி நடத்துனரினால் தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை புறாப்பொறுக்கி பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தனியார் சிற்றூர்தி நடத்துனரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இணைந்த நேர அட்டவணை இன்மையே இப் பிரச்சினைக்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-03)

### மாகியம்பிட்டி அம்மன் ஆலய

## தீர்த்தக் கேணியை ஆய்வுசெய்ய தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இரண்டு புராதன சைவ ஆலயங்களில் தொல்பொருள் ஆய்வு முன்னாயத்த பணிகளிற்காக அதிகாரிகள் சென்றதால் பரபரப்பான நிலைமையேற்பட்டது.

மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் கோவில் புராதன தீர்த்தக்கேணி, குளக்கரை பிள்ளையார் கோவில் பகுதிகளையே அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இது குறித்து பிரதேச மக்கள் தகவல் தெரிவித்ததையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் சி.அனுசன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

இராஜராஜன் சோழன் காலத்தில் கண்ணகை அம்மன் கோவில் தீர்த்தக்கேணி கட்டப்பட்டதாகவும், இராஜராஜன் கொடுத்தனுப்பிய புனித தீர்த்தம் அந்த கேணிக்குள் விடப்பட்டதாகவும் பிரதேசத்தில் ஐதீகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)




### வங்கி ஊழியர் உட்பட

## வடமாகாணத்தில் மேலும் ஐவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் மன்னாரில் வங்கியில் பணியாற்றும் மாத்தறையைச் சேர்ந்த உத்தியோகத்தர் என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மருத்துவ பீட ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 667 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களிலேயே ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-03,18)

## கேள்வி விண்ணப்பம் கோரல்

### நோயாளர் பராமரிப்பு சேவை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமானது வைத்தியசாலைக்கான நோயாளர் பராமரிப்பு சேவை (தனியார்) ஒன்றினை 01.03.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கு நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்கான கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது. இக்குத்தகைக்கான விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத தொகை ரூபாய் 1000 இனைச் செலுத்தி 04.02.2021 முதல் 14.02.2021 காலை 9.00 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். தனியாட்கள், குழுக்கள், சங்கங்கள் அல்லது நோயாளர் பராமரிப்பு சேவை நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் 14.02.2021 காலை 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்றையதினமே (14.02.2021) காலை 11.00 மணிக்கு நடைபெறும் எமது நிர்வாக சபை கூட்டத்தில் இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 021 226 3261, 021 226 3262

Dr. V. கமலநாதன், தலைவர்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.

(C - 1352)

# பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டம்

# கொட்டும் மழையிலும் முன்னெடுப்பு











(மட்டக்களப்பு)
பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், கொட்டும் மழையிலும் போராட்டக்காரர்கள் தமது நடை பவனியை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (நி-4)

## நீதிமன்றக் கட்டளைகளைக் கொண்டு எமது போராட்டத்தைத் தடுக்க முடியாது

(மட்டக்களப்பு)
நீதிமன்றக் கட்டளைகளைக் கொண்டு எமது போராட்டத்தைத் தடுக்க முடியாது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் ஆறாம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

சிவில் அமைப்பினரின் ஏற்பாட்டில் இந்தத் தொடர் போராட்டம் இடம்பெறவுள்ளதுடன், போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த்தேசியக் கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளன.

சிறுபான்மையினரின் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவது, மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை முன்னிறுத்தி இந்தப் பேரணி ஆரம்பமானது.

இந்நிலையில், குறித்த போராட்டம் ஆரம்பமாகிய நிலையில் அனைவரையும் ஆதரவு வழங்கும் முகமாக மீண்டும் மக்கள், இளைஞர்களுக்கு விடுத்துள்ள அழைப்பிலேயே இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "இந்த நாட்டில் எத்தனையோ போராட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் அரச நிகழ்வுகள் கூட கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால், தமிழ் மக்கள் தங்கள் உரிமை தொடர்பான விடயங்களுக்காகப் போராட்டம் நடத்தும் போது மாத்திரம் கொரோனாவும் நீதிமன்ற உத்தரவுகளும் வருகின்றன. இதுதான் இந்த நாட்டின் ஜனாதிபதியின் ஒரே நாடு ஒரே சட்டம்.

அரசாங்கத்தின் இவ்வாறான பாரபட்சம் காட்டும் அடக்குமுறைக்கு எதிராகவுமே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எமது மக்களுக்காக எந்தத் தடையையும் உடைக்கத் தயாராகவுள்ளோம்.

இது எமது உரிமைக்கான போராட்டம்" என்று சாணக்கியன் தெரிவித்தார். (நி-4)

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்திற்கு பல்கலை.மாணவர்கள் ஆதரவு

(நல்லூர்)
வடகிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று ஆரம்பித்த பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையிலான தொடர் போராட்டத்திற்கு யாழ்.பல்கலை.மாணவர்கள் தமது பூரண ஆதரவை தெரிவிக்கின்றனர்.

நாம் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது சுயநிர்ணய உரிமைகளுக்காக போராடி வருகின்றோம். தமிழராகிய நாம் இலங்கைத் தீவின் வடகிழக்கு ஒருங்கிணைந்த நிலப்பரப்பை தாயகமாகக் கொண்ட ஓர் தேசிய இனம். எங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் சகல உரிமையும் எமக்கு உள்ளது. இதனை வலியுறுத்தும் விதமாகவும் எமது இனத்தின் மீது தொடர்ச்சியாக இலங்கை அரசின் தொடர் அடக்குமுறைக்கும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எதிராகவும் நாம் கிளர்ந்தெழ வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு எல்லோருக்கும் உண்டு.

எமது அரசியலை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை தொடர்ச்சியாக மறுதலித்து வரும் இலங்கை அரசானது இப்போராட்டத்தினை தடை செய்யும் நோக்குடன் நீதிமன்றங்களினூடாக தடை உத்தரவினை வழங்கி எமது அடிப்படை உரிமையினை நசுக்க முயல்கின்றது.

இதனை தகர்த்தெறியும் விதமாக அனைவரும் அணியணியாக ஒன்றுதிரண்டு வந்து இப்போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் உரிமையுடன் வேண்டி நிற்கின்றோம். (நி-33)

## ஐ.நா.ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)
இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை நிராகரிக்க அரசா ங்கம் முடிவு செய்துள்ளதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், இந்த அறிக்கை குறித்து ஏற்கனவே எழுத்து மூலம் இலங்கை பதிலளித்துவிட்டதாகவும் குறிப் பிட்டார்.

இருப்பினும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரை யாற்றும் போது அது மீண்டும் பகிரங்கப்படுத்தப் படும் என்றும் தெரிவித்தார்.

17 பக்கங்கள் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் எழுப்பப்பட்ட குற்றச்சாட் டுகள் தொடர்பாக நம்பகமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)
காணாமல் ஆக்கப்பட்ட பலநூறு உறவுகளின் குழந்தைகள், உறவினர்கள் படும் வேதனை சுமந்த வாழ்வுக்கு விடிவு வேண்டும் என பல நாட்களாக நடத்தி வரும் போராட்டம் இன்று சகல பேதங்களுக்கும் அப்பால் மக்கள் ஜனநாயக எழுச்சிப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.


முன்னைய ஆட்சிக்காலத்தில் அநாதைகளாக்கப்பட்ட பள்ளி செல்லும் பிள்ளைகளின் உறவுகளை விடுவிக்குமாறு ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான கையொப்பங்களைப் பெற்று உரிய தரப்பிடம் கையளித்தோம்.

இன்றுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை. மாறாக ஆக்கிரமிப்புகளும் அடக்குமுறைகளும் நீண்டு செல்கின்றது.

இதற்கு தீர்வு வேண்டி இன்று மக்கள் எழுச்சிப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

இத்தகைய போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழு ஆதரவை வழங்கி நிற்கின்றது. (நி-4)

# இஸ்லாம் அரைச்சதம்; பங்களாதேஷ் நிதானம்



அரைச் சதமடித்த ஷாத்மன் இஸ்லாம்

மே.தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் வங்கதேச அணி முதல் நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களை எடுத்துள்ளது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு இரண்டு போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

சாட்டோகிராமில் முதல் டெஸ்ட் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித் தலைவர் மொமினுல் ஹக், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (9) மோசமான ஆரம்பம் கொடுத்தார். நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (25) ரன்-அவுட்' ஆனார். அணித் தலைவர் மொமினுல் ஹக் (26) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய மற்றொரு ஆரம்ப வீரர் ஷாத்மன் இஸ்லாம் (59) அரைச்சதம் கடந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட முஷ்பிகுர் ரஹிம் (38) நிலைக்கவில்லை.

பின் இணைந்த சகிப் அல் ஹசன், லிட்டன் தாஸ் ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது.

இந்நிலையில நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வரர பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் சகிப் (39), லிட்டன் தாஸ் (34) இருந்தனர்.

பந்துவீச்சில் மே.தீவுகள் அணி சார்பில் ஜோமல் வாரிகன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.




3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய மே.தீவுகளின் வாரிகனை ஆரத் தழுவும் பிளக்வூட்

# அன்பென்றாலே அம்மா என் தாய் போல் ஆகிடுமா...

## முருகன் அஷ்வின் உருக்கம்

"சையது முஷ்தாக் அலி 'ரி20' தொடரில் கிடைத்த வெற்றியை எனது அம்மாவுக்கு சமர்ப்பணம் செய்கிறேன்," என முருகன் அஷ்வின் தெரிவித்தார்.

தமிழக அணி சுழற்பந்துவீச்சாளர் முருகன் அஷ்வின் (வயது-30). ஐ.பி.எல்., தொடரில் டில்லி, புனே, பஞ்சாப், பெங்களூரு அணிக்காக விளையாடினார்.

சமீபத்திய சையது முஷ்தாக் அலி 'ரி20' தொடரில் தமிழக அணியில் இடம் பெற்றார். 8 போட்டிகளில் 10 விக்கெட்டுக்களைச் சாய்த்து, கிண்ணம் வெல்ல உதவினார்.




இந்த வெற்றியை சமீபத்தில் மறைந்த தனது அம்மாவுக்கு சமர்ப்பணம் செய்தார். 'இன்ஸ்டாகிராம்' சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில்,

ஒரு மாதத்துக்கு முன் எலும்பு மஜ்ஜை புற்றுநோயால் என் அம்மாவை இழக்க நேரிட்டது. கிரிக்கெட் மீது அதிக ஆர்வம் கொண்டவர். அவரால் தான் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேன்.

சிறுவனாக இருந்த போது ரப்பர், டென்னிஸ் பந்துகளை வாங்கி கொடுத்து எனது ஆர்வத்தை வளர்த்தார்.

அதிகாலையில் பயிற்சிக்கு அழைத்துச் செல்வது, வார இறுதி நாட்களில் நான் விளையாடுவதை ரசிப்பது, பள்ளியில் அனுமதி பெற்றுத் தருவது என பல விட யங்களில் கவனம் செலுத்தி எனது திறமையை வளர்க்க உதவினார்.

எனது 'நம்பர் 1' ரசிகை, விமர்சகர் அம்மா தான். நான் நன்றாக விளையாட வேண்டும் என விரும்பினார். அவர் மறைந்த சில நாட்களில் சையது முஷ்தாக் அலி தொடர் வந்தது.

அம்மாவுக்கு செய்ய வேண்டிய இறுதி கடமைகள் மீதமி ருந்ததால் குழப்பம் அடைந்தேன். 'தொடரில் பங்கேற்று நன்றாக விளையாடு, அது தான் அம்மாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்,' என அப்பா, சகோதரி, மனைவி தெரி வித்தனர்.

இந்தக் கிண்ணம் உங்களுக்கானது அம்மா. ஒவ்வொருமுறை களமிறங்கிய போதும், என் நெஞ்சில் அம்மா நிறைந்திருந்தார்.

தமிழகத்திற்காக அதிக விக்கெட் வீழ்த்திய வீராக மாறினேன். கிண்ணம் வென்ற தால் அம்மா பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்திருப்பார். நன்றி அம்மா!. இவ்வாறு அதில் தெரிவித்து இருந்தார்.

## 'கொரோனா' திரிமான்னே பிடியில்

## மே.தீவுகள் தொடருக்கு சிக்கல்

இலங்கை கிரிக்கெட் வீரர் திரிமான்னே, பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கொரோனா' தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இலங்கை அணியின் மே.தீவுகள் பயணம் ஒத்திவைக்கப்படும் என்று தெரிகிறது.

மே.தீவுகள் செல்லவுள்ள இலங்கை அணி, மூன்று ரி20', மூன்று ஒரு நாள், இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்காக 36 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணியினர், கடந்த ஜன. 28 முதல் மூன்று பிரிவுகளாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை வீரர்கள், பயிற்சி யாளர் குழுவினர், நெட் பந்து வீச்சாளர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர்.,' பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில் லகிரு திரிமான்னே, தலைமை பயிற்சியாளர் ஆர்தர் ஆகியோருக்கு 'கொரோனா' தொற்று உறுதியானது. இதனையடுத்து இவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனால் வரும் பெப். 20ல் ஆரம்பமாகவிருந்த இலங்கை - மே.தீவுகள் தொடர் திட்டமிட்டபடி நடப்பதில் சந்தேகம். புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து திரிமான்னே, தனது டுவிட்டரில்' பதிவிட்டுள்ள செய்தியில், எனக்கு எவ்வித அறிகுறியும் இல்லாமல் கொரோனா' தொற்று உறுதியானது. எப்படி பாதிக்கப்பட்டேன் என்று தெரியவில்லை.

அனை வரும் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்," என, தெரிவித்திருந்தார்.



## ஆலோசனை

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவதும் இறுதியுமான போட்டி இன்று பாகிஸ்தானின் ராவல் பிண்டியில் ஆரம்பமாகும் நிலையில், அதற்கான பயிற்சியில் ஈடுபடும் பாக். வீரர் பவாட் அலாமுக்கு ஆலோசனை வழங்கும் யூனிஸ் கான்

# சேப்பாக்கம்... நடராஜன் ஏக்கம்

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்க உள்ள டெஸ்டில் பங்கேற்க முடியாத ஏக்கத்தில் உள்ளார் நடராஜன்.

இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் 'யோர்க்கர்' நடராஜன் (வயது-29).

தமிழகத்தை சேர்ந்த இவர், அவுஸ்திரேலிய தொடரில் சிறப்பாக செயற்பட்டார். மூன்று வித அணியிலும் ஒரே தொடரில் அறிமுகமான முதல் இந்தியர் என்ற பெருமை பெற்றார்.

இருப்பினும் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை. இதுகுறித்து நடராஜன் கூறியதாவது,

என் வாழ்க்கையில் தொடர்ந்து ஆறு மாதங்கள் போட்டிகளில் பங்கேற்றது இது தான் முதன் முறை. ஊரடங்கு காலத்தில் பயிற்சிகளை தொடர்ந்ததால் ஐ.பி.எல்., மற்றும் அவுஸ்திரேலிய தொடரில் ஏற்பட்ட பணிச் சுமைகளை சமாளித்து விளையாட முடிந்தது.

கடந்த சில மாதங்களாக இந்திய அணி வீரர்களுடன் இருந்தேன். திடீரென தற்போது இல்லை என்றதும் சற்று ஏமாற்றமாக உள்ளது. ஆறு மாதங்கள் குடும்பத்தினருடன் இல்லை என்ற நிலையில், ஓய்வு எடுப்பது மிக முக்கியம் என்பதையும் புரிந்து கொள்கிறேன்.


இருப்பினும், சென்னையில் இந்திய அணி விளையாடும் போது, நான் இடம் பெறவில்லையே என்பது சோகத்தை தருகிறது.

மூன்று வித போட்டிகளிலும் விளையாடவே விரும்புகிறேன். இதற்கேற்ப வரும் மாதங்களில் என்னை தயார் செய்து கொள்வேன். இவ்வாறு அவர் கூறினார்.



# நீங்கா நினைவுகள்

உயிர் உருகி உணர்வேந்தி உங்கள் நினைவுகளில்
உறவுகள் நாம் துடிக்கின்றோம் துதிக்கின்றோம் உத்தமரே!
காலம் பல கடந்தாலும் கண்ணீரும் மறையாது
ஞாலமிதில் உம்மீர நினைவுகளில் நித்தம் தவிக்கின்றோம்



மண்மகிழ:- 04.02.1948
விண்ஏற்க:12.06.2019

அமரர் **நா.வை.குகராசா**
**(மணியண்ணன்)**

மேனாள் கரைச்சிப் பிரதேச சபைத்தலைவர்,
கரைச்சி தெற்கு கூட்டுறவுச்சபைத்தலைவர்,
இலங்கை குமரித்தமிழ் பணிமன்று ஆளுநர்,
சமாதான நீதிவான்.

வாழ்ந்தோம் ஒரு வாழ்க்கை என வாழ்ந்து மடியாமல்,
தாழ்ந்தோரை வெற்றிப்பாதைக்கு கொண்டுவரத் தானுழைத்த
மானிடவன் மணியண்ணன்! மனிதநேயன்! மக்கள் தொண்டன்!
புனிதனென புகழ்பூத்த, தலைவனென பெரும்பணிகள் ஆற்றியவா!
வள்ளலார்போல வாழ்ந்தவரே! வாடியவரைக்கண்டு வாடியவரே!
உள்ளமும் உடையும் வெள்ளையரே! கள்ளமிலா மனக் கண்ணியரே!
பிறருக்காய் பிறந்து வாழ்ந்த பெருந்தகையீர்!
இறவாது வாழும் இதயத்து இனியீர், பிறந்த நாளின்று மறவாது
மனங்களிலே நினைவேந்தித் துதிக்கின்றோம். நின் பாதம் பணிகின்றோம்!

அமரர் **சுப்பிரமணியம்**
**மாசிலாமணி**
**(ஜோன்சன்)**




மண்மகிழ 16.05.1963
விண்ஏற்க 04.02.1988

உன்நினைவில் உயிருருகும் உள்ளங்கள்
அன்பில் நிறைந்து அனைவருமே போற்ற வாழ்ந்தீர்!
பண்பில் நிறைந்த மாசில்லா மாமணினீர்!
மண்ணில் மலர்ந்தீர் மனிதநேயம் மிக்கவராய்!
புண்படா வண்ணம் புகலும் பண்புடையீர்!
மண்ணுக்காய் மரணித்த மாவீரத் தெய்வமே!
கண்ணுக்குள் நிற்கின்ற கண்ணிய மைந்தனே!
காலமும் மறக்கோமையா சுப்பிர மணியரின் பிள்ளைனீர்.
மரணிக்கவில்லைனீர் மனங்களில் வாழுகின்றீர்!

(C-1339)

**நிலத்திலும் புலத்திலுமிருந்து உயிருருகும் உம்பாச உறவுகள் நாம்**

# மரண அறிவித்தல்



மண்ணில்: 08.06.1930 விண்ணில்: 01.02.2021

## திரு. அருணாசலம் கந்தையா

இயக்கச்சி பளையைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை தற்காலிக வசிப்பிட மாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான அருணாசலம் கந்தையா அவர்கள் 01.02.2021 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இயக்கச்சி சின்னப்பு உடையாரின் பாசமிகு பேரனும் அருணாசலம்- பாறுவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சின்னையா- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, வேலுப்பிள்ளை, வள்ளியம்மை, மயிலாத்தை ஆகி யோரின் அன்புச் சகோதரனும்,

மனோன்மணி (ஜேர்மனி), சேதுகாவலர் (கனடா), காந்தரூபி (ஓய்வுநிலை உப அதிபர், கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி), சரோஜினிதேவி (உப அதிபர், கிளி/ இராமநாதபுரம் ம.வி), தங்கேஸ்வரன் (கனடா), மனோரஞ்சிதமலர் (ஆசிரியை, வ/ ஸ்கந்தபுரம் வாணி வித்தியாலயம்), நகுலேஸ்வரன் (கனடா), வனஜா (கனடா), கிருஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

அதிட்டலிங்கம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (கனடா), காசிலிங்கம் (ஓய்வுநிலை பிரதி அதிபர், கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா), மகேந்திரன் (வட்டக்கச்சி), சந்திரவதனி (கனடா), தனபாலசிங்கம் (அதிபர், வ/நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தரப் பாடசாலை), கார்த்திகா (கனடா), சிறிகரன் (கனடா), கபிலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும்,

காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, கந்தையா, விஜயரட்ணம், நல்லதம்பி மற்றும் முத்துலட்சுமி, கண்ணகை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் தெய்வானையம்மன், கிருஸ்ணபிள்ளை, விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும்,

ரோபினி- நந்தகுமார், நிதர்சன், அனோஜன், சஜிதன், அபிநயா, சங்கீர்த்தன், தனுஷா, புருசோத்தமன், கிருபன், தர்சன்- யாமினி, /திவாகரன், மதுரா, விதுஜன், சங்கவி, ஆதித்தியன், ஆரிஷா, சாரங்கன், தனுஸ், அபிரா, எஸ்டன்அக்சன், காவின்போகி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.02.2021 இன்று வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.284, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.**

(C-1347)

**தகவல்:-குடும்பத்தினர்**
**திருமதி காந்தரூபி காசிலிங்கம் (மகள்)**
**திரு வேலுப்பிள்ளை சிவனேசன் (பெறாமகன்)**
**SO, மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**

# யாழ்.போதனாவில் இரண்டு வருடங்களாக வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

## ஆதங்கம் வெளியிட்டார் பணிப்பாளர்

(குப்பிழான்)

**யாழ்.போதனா வைத்தியசாலையில் முக்கிய மூன்று ஆளணிகளான வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் வெற்றிடங்களுக்கு கடந்த 2 வருடங்களாக நியமனங்கள் செய்யப்படவில்லை என ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆதங்கம் வெளியிட்டார்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தற்போது மிக முக்கியமான மூன்று ஆளணிகளான வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் போதியளவு இல்லாமையால் நெருக்கீடுகளைச் சந்தித்துள்ளது.

மூன்று துறையினருக்குமான ஆளணிகள் அதிகரிக்கப்பட வேண்டும். வெற்றிடங்களுக்கு நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த ஆளணி அதிகரிப்புச் செய்யப்படவில்லை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் த. சத்தியமூர்த்தி ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்தில் கலந்து



கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் கடந்த திங்கட்கிழமையும் மத்திய அமைச்சில் இந்த விடயம் சம்பந்தமாக சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளருடன் கலந்துரையாடியிருந்தேன். இந்த வருடம் குறித்த வெற்றிடங்களை நிவர்த்தி செய்து தருவதாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியசாலை இனுவில் பகுதியில் அமையவுள்ளது. சிறுவர் வைத்தியசாலையின் காணிப் பிரச்சினையை வடமாகாண ஆளுநர் எங்களுக்குத் தீர்த்து தந்துள்ளார்.

அரியாலையில் உள்ள இரண்டரை ஏக்கர் காணியில் கண் வைத்தியசாலை அமையவுள்ளது.

இதற்கான கோரிக்கையையும் நாங்கள் மத்திய அமைச்சுக்கு விடுத்துள்ளோம்.

மகப்பேற்று விடுதி அமைத்தல் தொடர்பாகப் பல வருடங்களாக நாம் கலந்துரையாடி வருகிறோம்.

இந்த வருடம் குறித்த மகப்பேற்று விடுதி அமைத்துத் தரப்படும் எனச் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இருதய சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறுநீரகத் தொகுதிகள் எதிர்வரும் வருடங்களில் கட்டி முடிக்கப்பட வேண்டியவை. இவை ஒவ்வொன்றும் அமைப்பதற்கு ஆயிரம் மில்லியனுக்கும் மேல் செலவாகும்.

ஆனால், வருடாந்தம் சுகாதார அமைச்சினால் ஒதுக்கப்படும் சாதாரண நிதி ஒதுக்கீட்டில் செய்ய முடியாதுள்ளது.


எனினும், இவ்வருடத்தில் 400 மில்லியன் ரூபாய் பெறுமதியான கட்டட அமைப்புக்கான கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக சுகாதார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் இது வரை உரிமை கோரப்படாத நிலையில் NP - JM - 1486, NP - JJ - 2935, NP - HD - 4347 ஆகிய இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள்களும் இலக்கமற்ற 2 மோட்டார் சைக்கிள்களும் காணப்படுகின்றன.

எனவே குறித்த மோட்டார் சைக்கிள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் இரண்டுமாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு வேலம்பிராய் அம்மன் கோவில் வீதிக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் வீதிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். (படம்:- சுபேசன்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், அரச கட்புலக் கலை ஆலோசனைக்குழு ஏற்பாட்டில் நடைபெறவுள்ள அரச சிறுவர் ஓவிய விழா - 2021 மற்றும் அரச ஓவிய சிற்ப விழா - 2021 ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரச சிறுவர் ஓவியப் போட்டியில் 5-18 வயது பாடசாலை மாணவர்களும் மற்றும் அரச ஓவிய சிற்பப் போட்டி 18 வயதிற்கு மோற்பட்டோரும் பங்கு பற்ற முடியும்.

எனவே நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டோர் குறித்த போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (5)




2019, 2020 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த இளைஞர் விருது சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் சு.நக்கீரனுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அண்மையில் வழங்கப்பட்டது. (படம்:- சுபேசன்)

## திறப்பு விழாவும் கண்காட்சியும்

(அளவெட்டி)

அளவெட்டி அருணாசல வித்தியாலய சிறுவர் பூங்கா திறப்பு விழா, கண்காட்சி மற்றும் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும்விழா என்பன நாளை 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அதிபர் கு.லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.அரசகேசரி கலந்து கொள்வார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக அளவெட்டி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி.பிரதக்சி கோபிநாத், AVR அறக்கட்டளை அமைப்பு சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (5-4)

## திருத்தல திருவிழா நடைபெறாது

(கரணவாய்)

தற்கால சுகாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு யாழ். மறைமாவட்ட திருத்தலங்களில் ஒன்றாகிய வடமராட்சி தும்பளை புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா இவ்வாண்டு நடைபெறாது என புனித லூர்து அன்னை திருத்தல பரிபாலகர் அறிவித்துள்ளார். (5-4-60)

## இரத்ததானம்

(குப்பிழான்)

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அரியாலை இளைஞர் கழகம் அரியாலை திருமகள் சனசமூக நிலையத்துடன் இணைந்து முன்னெடுக்கும் மாபெரும் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் 6 ஆம் திகதி சனிக்கிழமை திருமகள் சனசமூக நிலைய உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள குறித்த இரத்ததான நிகழ்வில் ஆர்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 076 678 2714 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (5-4-18)

# தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 3966 வீடுகள் தேவை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு மேலும் 3966 முழுமையான வீடுகள் தேவைப்படுவதாக தென்மராட்சிப் பிரதேச செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் தமது முன்மொழிவில் 1107 பகுதியான திருத்த வேலைகள் உள்ள வீடுகளும் 650 சாதாரண மலசலகூடங்கள், 62 விசேட தேவை உடையவர்களின் மலசலகூடங்கள், 159 தனியார் கிணறுகள், 502 குடும்பங்கள் மின்சார இணைப்பு தேவைப்படுபவர்களாக உள்ளனர்.

அதேவேளையில் தென்மராட்சியில் காணி இல்லாமல் 253 குடும்பங்கள் உள்ளன.


இவற்றுக்கு மேலாக புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் 319 பிரதேச சபை வீதிகளும் 65 நகரசபை வீதிகளும் 120 குளங்களும் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். (5-4-30)

# இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத்தர தொடர்ந்து ஆதரவு வழங்குங்கள்

## உலக நாடுகளுக்கு மாவை அழைப்பு

**(கொழும்பு)**

**இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுக்கொடுக்க தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டுமென உலக நாடுகளின் தலைவர்களுக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.**




இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது டுவிட்டர் பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த காணொளியை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள மாவை சேனாதிராஜா, இனப்படுகொலைக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டுமென கோரியுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலாளர், ஐ.நா. மனிதவுரிமைகள்ஆணையாளர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், பிரிட்டன் பிரதமர் போரிஸ்ஜோன்சன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்டவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி-4)

# கருணா, பிள்ளையானை சந்தித்த இந்தியத் துணை உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் வினோத். கே.ஜேக்கப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகியோரை தனித் தனியாக சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்புக்கள் கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்த இரு சந்திப்புக்களிலும் இலங்கையுடனான நீண்ட அபிவிருத்தி பங்குடைமையை பேணுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டினை பிரதி உயர்ஸ்தானிகர் ஜேக்கப் வலியுறுத்தியிருந்தார்.

பிரதி உயர்ஸ்தானிகர் ஜேக்கப் மற்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் மாகாண சபைகள் மற்றும் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துதல் குறித்தும் கலந்துரையாடினர்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கான வாழ்வாதார வாய்ப்புக்கள், கல்வி மற்றும் புலமைப்பரிசில் உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் எதிர்கால அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின்போது விநாயகமூர்த்தி முரளிதரன் எடுத்துரைத்துள்ளார்.

மாகாண சபை மற்றும் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாக அமுல்படுத்துதல் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த வழி அர்த்த புஷ்டியான . பரவலாக்கம் என்பதே இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பதனை பிரதி உயர்ஸ்தானிகர் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# கொள்வனவு செய்வதாகக் கூறி கொள்ளையிட்ட நபர்கள் கைது

(கொழும்பு)

மத்தேகொட பகுதியில் 52 இலட்சம் ரூபாய் காரொன்றை கொள்வனவு செய்வதாகக் கூறி அதனை கொள்ளையிட்டுச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்காக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, மத்தேகொட பகுதியில் 52 இலட்சம் ரூபாய் பெறுமதியான கார் ஒன்றை விற்பனை செய்வதாகவும் அந்தக் காரை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளுமாறும் நபரொருவர் இணையத்தளத்தில் விளம்பரம் செய்துள்ளார்.

குறித்த நபர் காரின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் தந்தை ஆகியோரின் தொலைபேசி இலக்கங்களை அந்த விளம்பரத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று குறித்த காரை கொள்வனவு செய்வதற்கு விளம்பரம் செய்த நபருக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து காரை பார்வையிடுவதற்காக நால்வர் வந்துள்ளனர்.

வந்தவர்களில் மூவர் காரை செலுத்தி பார்க்க வேண்டும் என்று கூறி, கார் உரிமையாளருடன் அதனை ஓட்டிச் சென்றுள்ளனர்.

வீட்டிலிருந்து சிறிது தூரம் சென்றதும் சந்தேக நபர்கள் உரிமையாளரை வெளியே தள்ளி காரை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் மத்தேகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-4)

# மனு விசாரணைக்கான திகதி அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவுக்கு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ள மரண தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான திகதியினை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன் கிழமை அறிவித்தது.

இதற்கமைய, எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

அது தொடர்பிலான சட்டமா அதிபரின் வியாக்கியானத்தை ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முன்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி எழுத்து மூல வியாக்கியானத்தை தாககல் செய்யுமாறு முறைப்பாட்டாளர் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி பிரேமலால் ஜயசேகரவிற்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வீறாப்புப் பேசி உலகத்தை பகைக்காதீர்

(கொழும்பு)

வீறாப்புப் பேசி உலக நாடுகளைப் பகைத்துக்கொள்ளாமல், மதிநுட்பத்துடன் செயற்படும் பொறிமுறையை அரசு கையாள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வதேச சமூகத்துடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள் பலப்படுத்த வேண்டும். அதன்மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இராஜதந்திர நடவடிக்கை அமைய வேண்டும். எனவே, உள்நாட்டு வளங்களைப் பாதுகாத்துக்கொண்டு, வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதற்கான உபாயமார்க்க பொறிமுறையை உருவாக்க முடியும்.

நாட்டின் தனித்துவம், இறையாண்மை ஆகியவற்றை பாதுகாத்துக்கொண்டு இதனைச் செய்ய முடியும். மாறாக இனவாதம், வீறாப்புப் பேசி உலக நாடுகளைப் பகைத்துக்கொள்வதில் பயன் இல்லை.

எமது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் கொடுக்கல்-வாங்கலில் ஈடுபட முடியும். அதற்கு மதிநுட்பம்அவசியம். அதற்கான வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது" என்றார். (நி-4)

# கிழக்கு முனையத்தை பாதுகாத்தது போல ஏனைய வளங்களையும் பாதுகாக்க வேண்டும்

## குணவங்ச தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சியாளர்கள் நாட்டின் நிர்வாகிகளே அன்றி உரிமையாளர்கள் அல்ல என்பதை அரசாங்கம் உணர்ந்து செயற்பட வேண்டும். கிழக்கு முனையத்தை பாதுகாத்தது போல் நாட்டின் ஏனைய வளங்களை பாதுகாப்பதற்கும் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

23 தொழிற்சங்கங்களும் இணைந்து போராடியதாலேயே துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. எம்மை பிளவுபடுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவற்றுக்கு யாரும் துணை போகவில்லை. இந்த ஒற்றுமை தொடர்ந்து இருக்க வேண்டும்.

நாங்கள் எமது பலத்தை காட்டியிருக்கின்றோம். அதனால் அரசாங்கம் எதிர்கா லத்தில் இவ்வாறான நடவடிக்கைகளைமேற்கொண்டாலும்அதனை தடுத்து நிறுத் துவோம்.

கிழக்கு முனையம் தொடர்பில் அரசாங்கத்தின் மீது விரக்தியடைந்திருக்கின்றோம். அதனை வெற்றி கொண்டமை மகிழ்ச்சியாக இருந்தாலும் எதிர்காலத்திலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# எல்லை மீறும் இந்திய மீனவர்களினால் 2 கோடியே 49 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் நட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவு கடல் பகுதியில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளால் கடந்த நவம்பர் மாதம் மூன்று நாட்களில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக இரண்டு கோடியே 49 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பகுதியில் 689க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 16, 18, 21 ஆம் திகதிகளில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கைகளால் 174 கடற்றொழிலாளர்கள் தங்களுடைய கடற்றொழில் உபகரணங்களை இழந்துள்ளனர்.

குறிப்பாக பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை இழந்துள்ளனர். இதன்மூலம் 2 கோடியே 49 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்திய இழுவைப் படகுகளின் எல்லை தாண்டிய தொழில் நடவடிக்கைகளால் தமது தொழில்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகவும் உயிர் ஆபத்துக்களைக் கூட எதிர் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள நெடுந்தீவு கடற்றொழிலாளர்கள் தற்போது தொழில் உபகரணங்களை இழந்துள்ள நிலையில் நாளாந்தம் கூலி வேலைகளுக்காக செல்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை புரவி புயல் காரணமாகவும் நெடுந்தீவு பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரவிபுயல் காரணமாக 10 படகுகள் முழுமையாக சேதமடைந்ததுடன் 68 படகுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (5-4-315)

## வீடமைப்பு அதிகார சபையை கண்டித்து மன்னாரில் பெண்கள் போராட்டம்



(மன்னார்)

மன்னார் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்துக்கான நிதி விடுவிக்கப்படாததை எதிர்த்தும் மீதிக் கொடுப்பனவுகளை வழங்குமாறும் கோரி மன்னார் ஜீவபுரம் சாந்திபுரம் ஜிம்றோன் நகர்ப்பகுதிகளை சேர்ந்த பெண்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுத்தனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கான நிதி மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் பழைய வீடுகளும் இன்றி புதிய வீடும் முடிவுறுத்தப்படாத நிலையில் பல்வேறு அசௌகரியங்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்து வீட்டுத்திட்ட பயனாளிகளான பெண்கள் குறித்த போரட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (5-4-285)

## விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கட்டடத் தொகுதி திறப்பு விழா

(கிளிநொச்சி)

இலங்கையின் விவசாய அபிவிருத்தியை நோக்கிய விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தும் முகமாக ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சுமார் 2,400 மில்லியன் ரூபாய் செலவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் நிறுவப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டடத் தொகுதியானது நாளை 5 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அழைப்பின் பேரில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, கல்வி அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கே.கபில சி.கே.பெரேரா மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோரின் பிரசன்னத்தில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா ஆகியோரால் இக்கட்டடத் தொகுதி கூட்டாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமாகிய அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் இராகவன் உட்பட அரசியல் பிரமுகர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

ஜப்பானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டுள்ள நவீன ஆய்வுகூட வசதிகள் விவசாய பீடத்தின் பங்களிப்புடன் இலங்கையின் விவசாய அபிவிருத்தியில் முக்கியமாக வடபகுதியில் விவசாய அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றவிருப்பது குறிப்பிடத்தக்கது. (5-4)

## சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா பட்டானிச்சூர் பகுதிகளில் சிலர் சட்டவிரோதமான முறையில் திருட்டு மாடுகளை வெட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் அதன் கழிவுகள் பட்டக்காடு குளத்திற்கு அருகில் கொட்டுகின்றனர்.

இதனால் அப்பகுதியை சூழவுள்ள பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் அசௌகரியத்திற்குட்பட்டுள்ளதாகவும் இதனைக்கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சமூக ஆர்வலர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது .



வீசப்பட்டுவரும் கழிவுகளை கால்நடைகள் மற்றும் பறவைகளினால் வீதிகளில் ஆங்காங்கே இழுத்து விடப்படுவதனாலும் அச்சூழல் சீர்கேடாகக் காணப்படுகின்றது.

எனவே இச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-299)

## வீட்டுத்திட்ட கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படவில்லை

(கண்டாவளை)

கரைச்சி பிரதேசத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட 936 வீடுகளுக்கான கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படாமையினால் அதனை பெற்றுக்கொண்ட வீட்டுத்திட்ட பயனாளிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின் காரணமாக வீட்டுத் திட்டங்கள் இன்றி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் சுமார் ஏழரை இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

ஆனால் அதற்கான முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்ட நிலையில் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையில் வீட்டுத் திட்டங்கள் இடை நடுவில் காணப்படுகின்றன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 936 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் இவ்வாறு நிறைவேற்றப்படாமல் அரைகுறையாகவே காணப்படுகின்றன. இதற்காக 98.495 மில்லியன் ரூபாய் நிதி மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் 603.505 மில்லியன் ரூபாய் நிதி விடுவிக்கப்பட வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-315)

## இராசிபலன்

04.02.2021
தை 22, வியாழக்கிழமை
சப்தமி பிற்பகல் 2.05 மணிவரை
சுவாதி முன்னிரவு 9.32 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி, ரேவதி
உலக புற்றுநோயாளர் தினம் வளவன்


மேஷம்

விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


ரிஷபம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலம் சீராகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


மிதுனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், வாகன சுகமுண்டு, பெருமைகள் வந்து சேர வழிபாட்டை மேற்கொள்வீர்கள்.


கடகம்

பெற்றோர் மீது பிரியம் கூடும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


சிம்மம்

நினைத்தது நிறைவேறும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் கைகூடும்.


துலாம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சிந்தனை மிகுதியான நாள்.


விருச்சிகம்

உறவினர்கள் வருகையுண்டு, காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.


தனுசு

அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மகரம்

புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.


கும்பம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்கள் கைகூடும்.


மீனம்

வளர்ச்சி காண வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிரயாண பயமுண்டு, திடீர் மனஸ்தாபம் ஏற்படலாம்.

அதிக அக்கறை அழிவில் முடியும்.

# கொவெக்ஸ் சலுகையின் கீழ் இலங்கைக்கு 40 இலட்சம் தடுப்பூசிகள்

## உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானம்

(கொழும்பு)

**கொவெக்ஸ் சலுகையின் கீழ் 40 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை நாட்டிற்கு வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இதன் கீழ் அஸ்ட்ராஜெனெகா கோவிஸீல்ட் தடுப்பு மருந்துகள் இலவசமாக கிடைக்கவுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தென்கிழக்காசிய வலயத்திற்கான பிரதிநிதி. விசேட வைத்திய நிபுணர் பாலித்த அபேகோன் தெரிவித்துள்ளார். அதன்படி முதல் கட்டத்தில் 30 வீத தடுப்பூசிகள் இம் மாத இறுதிக்குள் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எஞ்சிய கொரோனா தடுப்பூசிகள், பல்வேறு கட்டங்களின் கீழ் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் நாட்டிற்கு இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் பாலித்த அபேகோன் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# வல்லரசுகளின் சண்டைக் களமாக நாட்டை மாற்றிய அரசாங்கம்

## லக்ஸ்மன் கிரியெல்ல சாடல்

(கொழும்பு)

வல்லரசுகளின் சண்டைக் களமாக அரசாங்கம் நாட்டை மாற்றியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சிகளின் பிரதம அமைப்பாளருமான லக்ஸ்மன் கிரியெல்ல குற்றம்சாட்டியுள்ளார்.



கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் பேசியதாவது.

ஏற்கனவே இலங்கையில் பதவியில் இருந்து டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, டபிள்யூ.ஆர். பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க உள்ளிட்டோர் இலங்கையில் உரிய வெளிநாட்டுக் கொள்கைகளை கடைப்பிடித்தனர்.

எனினும் இன்றைய ராஜபக்ஷ அரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கையில் உரிய நடைமுறையை பின்பற்றவில்லை. மாறாக சீனாவின் ஆதிக்கத்தை நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

இதனால் இப்போது வல்லரசுகளின் சண்டைக்களமாக இலங்கை மாறியிருக்கிறது. அது இந்த அரசாங்கத்தின் நடவடிக்கையினால் ஏற்பட்ட விளைவு என்றும் கிரியெல்ல குற்றம் சாட்டினார். (நி-4)




பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் தாரெக் எம்.டி அரிஃபுல் இஸ்லாம் மற்றும் துணை உயர் ஸ்தானிகர் மெஹமட் ஹஸ்ரத் அலிகான் ஆகியோர் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பானது கொழும்பு, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரது உத்தியோக இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

# உயர்மட்டங்களை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கொள்கலன் முனையத்தை (இ.சி.டி) அபிவிருத்தி செய்வதற்காக இந்தியா மற்றும் ஜப்பானுடனான ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை பின்வாங்கிய ஒரு நாள் கழித்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி த இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முடிவில் உயர்மட்டத்தில் இந்திய அரசு கடுமையான ஏமாற்றத்தை வெளிப்படுத்தக்கூடும் என்று புதுடில்லி அதிகாரங்கள் முன்பு கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அதிகரித்துவரும் தற்கொலைகளை தடுக்க

# 24 மணிநேர தொலைபேசி சேவை

## அபயம் அறக்கட்டளையால் அறிமுகம்


(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் அதிகரித்துவரும் தற்கொலைகள், தற்கொலை முயற்சிகளைத் தடுக்கும் நோக்குடன் 24 மணி நேர இலவச தொலைபேசி சேவை அபயம் அறக்கட்டளை சார்பில் நல்லூரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.**

லண்டனைத் தளமாக கொண்டு இயங்கிவரும் அபயம் அறக்கட்டளையுடன் இணைந்து செயற்பட்டு வரும் சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்று முனதினம் செவ்வாய்க்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற யாழ்.பிராந்தியக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் 24 மணிநேர இலவச தொலைபேசி சேவையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் த. சத்தியமூர்த்தி மற்றும் அமெரிக்க ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோரும் கலந்து கொண்டு குறித்த சேவை தொடர்பாகவும், தற்கொலை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களையும் வழங்கினர்.

அந்தவகையில் தற்கொலை மனநிலையிலுள்ளவர்கள் **0710712345** எனும் தொலைபேசி இலக்கத்துடன் வடமாகாணத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் தொடர்பு கொள்வதன் மூலம் வைத்தியரின் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வாறான மனக் குழப்பத்தில் உள்ளவர்களும் மேற்குறித்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.



தற்கொலை மனநிலையிலுள்ளவர்கள் மாத்திரமன்றி தமது நண்பன் அல்லது நண்பி இவ்வாறான மனநிலையிலுள்ளார்கள் என்பதை அறிந்து வைத்துள்ள நண்பர்கள் மற்றும்உறவுகளும்மேற்படிதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்பதற்கு தேவையேற்படின் வைத்தியரின் நேரடி ஆலோசனைகளையும் பெற முடியும்என்பதையும் தெரியப்படுத்தலாம். (5-4-18-33)

## டொமினிக் ஜீவாவின் அஞ்சலிக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளரும் மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியருமான டொமினிக் ஜீவாவின் அஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தொழிற்சங்க செயற்பாட்டாளர் பொ.சிவபாலன், சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜா, எழுத்தாளர் சி.கருணாகரன், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் ஆகியோர் அஞ்சலியுரைகளை ஆற்றவுள்ளனர். (5-4)

# மக்களுடன் நெருங்கி பழகுபவர்களுக்கு

# தடுப்பூசியில் முன்னுரிமை வழங்க வேண்டும்

## மருத்துவர் யமுனாநந்தா



(நல்லூர்)

இனிவரும் காலங்களில் கொவிட்- 19 தடுப்பூசி மக்களுடன் நெருங்கி பழகுகின்றவர்களுக்கும் வழங்கப்படுதல் அவசியம் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருட காலமாக கொவிட் நோய் உலகெங்கும் பரவி வருகின்றது. இன்றுவரை உலகில் 103 மில்லியன் மக்களுக்கு நோய் ஏற்பட்டுள்ளது 2.2 மில்லியன் மக்கள் இதனால் உயிரிழந்துள்ளார்கள்.

அடுத்து இன்று உலகின் மிக வேகமாக மூன்றுவகை கொவிட் வைரஸ் பரவி வருகின்றது. இந்நிலையில் கொவிட் நோய்க்கான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வளர்முக நாடுகளில் அதிக அளவில் தடுப்பூசி உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் முதற்கட்டமாக சுகாதார சேவையில் பணியாற்றுபவர்களுக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஊசி போடுவதற்கு முக்கிய காரணம் கொரோனா நோய் எதிர்ப்புச் சக்தியை எமது உடலில் ஏற்படுத்துவதனால் உயிரிழப்புகளை தவிர்க்க முடியும்.

கட்டாயம் கொள்வனவு செய்து விநியோகிக்கும் போது முதலில் யார் கூடுதலாக நோயாளிகளுடன் பழகுகின்றார்களோ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் குறிப்பாக வர்த்தகர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், பேருந்து நடத்துநர் மற்றும் சாரதிகள் என மக்களுடன் நெருங்கி பழகுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அடுத்து நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்தார். (5-4-33)

# தொடரும் போராட்டம்



(முறிகண்டி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கறுப்பு துணிகளால் முகத்தை மறைத்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (5-4-100)



கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இளைஞர் அணியான மாற்றத்துக்கான மாவட்ட இளைஞர் பேரவையுடன் இணைந்து உரும்பிராய் செல்வபுரம் கிராமத்தில் மரம் நடுகைத்திட்டத்தை மேற்கொண்டது. இதில் வலிகிழக்கு தவிசாளர் நிரோசன் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டார்.

## மியன்மாரிலுள்ள ரோஹிஞ்ய அகதிகள் குறித்து கவலை வெளியிட்ட ஐ.நா.



(ஜெனிவா)

மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி, அரசியல் தலைவர்களைச் சிறையில் அடைத்துள்ள நிலையில் நாட்டில் தற்போதுள்ள 6 இலட்சம் ரோஹிஞ்ய முஸ்லிம்களின் அவல நிலை மேலும் மோசமாகலாம் என ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டுள்ளது.

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் அரசாங்கத்திற்கு எதிராக சதிப்புரட்சி செய்து இராணுவம் அங்கு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

மியன்மாரின் ராகைன் மாநிலத்தில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற ரோஹிஞ்ய முஸ்லிம்கள் மீதான இனப்படுகொலைகளை அடுத்து 740,000 இற்கும் அதிகமான ரோஹிஞ்ய முஸ்லிம் மக்கள் பங்களாதேஷ்க்கு தப்பிச் சென்று அங்கு அடைக்கலம் புகுந்துள்ளனர். அங்கு அவர்கள் இன்னும் அகதி முகாம்களில் சிக்கித் தவிக்கின்றனர்.

ரோஹிஞ்ய முஸ்லிம்கள் மீதான நடவடிக்கையை இன அழிப்பு என ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் கண்டித்தார். அத்துடன் மேற்குலக நாடுகளும் மியன்மார் இராணுவத்தின் ரோஹிஞ்ய முஸ்லிம்கள் மீதான தாக்குதலை இன அழிப்பு எனக் கண்டித்தன.

முகாம்களில் உள்ள மக்கள் சுதந்திரமாக வெளியே செல்ல முடியாது. சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இந்நிலையில் சதிப் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் மியன்மாரில் உள்ள ரோஹிஞ்ய முஸ்லிம்களின் நிலை மேலும் மோசமாகலாம்.

இதேவேளை, மியன்மாரின் இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னரான நிலை குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் அவசரமாகக் கூடி ஆராய்ந்தது.

இதன்போது மியன்மார் இராணுவத்தின் செயற்பாட்டைக் கண்டித்து பாதுகாப்பு சபை உறுப்பு நாடுகள் கூட்டிணைந்து கண்டனம் தெரிவித்துக் கூட்டறிக்கை வெளியிடும் யோசனை முன்வைக்கப்பட்டபோதும் இதற்கு சீனாவும் ரஷ்யாவும் உடனடியாக உடன்பட மறுத்தன. இதனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.(நி-4)

## விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்த அமெரிக்க பிரபலங்கள்

(வோஷிங்டன்)


**அமெரிக்காவைச் சேர்ந்த பாப் சுப்பர் ஸ்டார் ரிஹானா இந்தியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து டுவிட் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரைப் போலவே உலகப் புகழ் பெற்ற இளம் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் கிரெட்டாதுன் பெர்க்கும் தனது ஆதரவைப் பதிவிட்டுள்ளார்.**



இந்தியாவின் மத்திய அரசு கடந்த சில மாதங்களுக்கு முன்னர், எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கொண்டு வந்த வேளாண் சட்டங்களை எதிர்த்து 65 நாட்களுக்கு மேலாக பெருந்திரளான விவசாயிகள், டில்லி எல்லைகளில் போராட்டம் செய்து வருகின்றனர்.

இறுதியாக அவர்கள் குடியரசு தினமான ஜனவரி 26 ஆம் திகதி, டிராக்டர் வண்டிகளில் பேரணி நடத்தி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்தார்கள்.

டில்லி எல்லைகளில் போராடி வரும் விவசாயிகளுக்குக் கடந்த சில நாட்களாக இணையத்தள சேவை முடக்கப்பட்டுள்ளது.



அதேபோல போராட்டக் களத்திற்கு மின்சார வசதி மற்றும் தண்ணீர் வசதியையும் துண்டித்துள்ளது அரசுத் தரப்பு.

இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில் விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ரிஹானா தனது டுவிட்டரில், 'இது குறித்து நாம் ஏன் பேசுவதில்லை?' என்று கேட்டு பதிவிட்டுள்ளார்.

அவரைப் போலவே கிரெட்டாவும் 'நாங்கள் விவசாயிகளின் போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவிக்கிறோம்' என்று தனது டுவிட்டர் பதிவில் பதிவிட்டுள்ளார்.

இவர்களது இந்தப் பதிவுகள் சர்வதேச அளவில் பேசுபொருளாகி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி-4)

## விண்வெளிக்கு சுற்றுலா செல்லலாம்

### ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவிப்பு

(வோஷிங்டன்)

மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த விண்வெளி வீரர்கள் அல்லாத மனிதர்கள் பங்கேற்கும் விண்வெளி சுற்றுலாத் திட்டம் தொடர்பான அறிவிப்பை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ்-ன் டிராகன் குறுங்கலத்தில், அனுபவம் வாய்ந்த பைலட் ஜாரெட் ஐசக்மேன் தலைமையில் 4 நபர்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பூமியைச் சுற்றி வருவார்கள்.

இன்ஸ்பிரேஷன் 4 என பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் பணவசூல், குழந்தைகள் மருத்துவமனை ஒன்றுக்கு வழங்கப்படும் என ஸ்பேஸ் எக்ஸ் தெரிவித்துள்ளது.

விண்வெளிக்கு செல்லும் இந்த 4 பேருக்கும் பால்கன் ரொக்கெட் மற்றும் டிராகன் குறுங்கலத்தில் தேவையான பயிற்சியும் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## நவால்னிக்கு சிறை; நீதிமன்றம் தீர்ப்பு



(மொஸ்கோ)

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அரசின் செயற்பாடுகளை அலெக்ஸி கடுமையாக விமர்சித்து வந்தார். இந்நிலையில் கடந்த ஆண்டு அவரை விஷம் வைத்துக் கொலை செய்ய முயற்சி நடந்ததாகத் தகவல் வெளியானது.

இந்நிலையில் ஜேர்மனியிலிருந்து கடந்த மாதம் ரஷ்யா திரும்பிய அலெக்ஸி, மோசடி வழக்கு ஒன்றில் பரோல் விதிமுறைகளை மீறியதாகக் கூறி விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணையின் முடிவில் அலெக்ஸிக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையறிந்த அவரின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே அலெக்ஸியை விடுவிக்க வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான மம்மிகள் தங்க நாக்குடன் கண்டெடுப்பு

(எகிப்து)

வாய்க்குள் தங்கத்தினாலான நாக்குகள் வைக்கப்பட்ட சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையான மம்மிகளை எகிப்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.




இறப்புக்கு பிறகான வாழ்க்கையில் ஒசைரிஸ் கடவுளின் நீதிமன்றத்தில் பேசுவதற்காக நாக்குகளின் வடிவிலான தங்கப் படலம் போன்ற தாயத்துக்கள் சடலத்துடன் புதைக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

பாதாள உலகத்தின் அதிபதி ஒசைரிஸ் என்றும் அவரே இறந்தவர்களுக்கு நீதிபதி என்றும் கருதும் பண்டைய எகிப்தியர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் இந்த மம்மிகள் அமைந்துள்ளன.(நி-4)

# சுதந்திர வர்த்தக வலயத்தில் தீ விபத்து





(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றின் ஆய்வகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தானது நேற்று அதிகாலை 4.45 மணியளவிலேயே இடம் பெற்றுள்ளது.

விபத்தினையடுத்து தீப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் தீயணைப்பு-கொழும்பு தீயணைப்பு படையினரும், தீயணைப்பு வாகனங்களும் விரைந்து செயற்பட்டுள்ளனர்.

தீ விபத்துக்கான காரணங்கள் தெரியாத நிலையில், தீப் பரவலினால் உண்டான சேத விபரங்களும் இன் னும் மதிப்பிடப்படவில்லை. (நி-4)

# இந்தியாவில் கைது செய்யப்பட்டவர்களை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்களையும், போதைப் பொருள் வர்த்தகர்களையும் விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அவசி யமான இராஜதந்திர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வ தாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குறித்த தரப்பி னரை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான உபாய மார்க்கம் தொடர்பில் ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின்உறுப்பினரும் போதைப் பொருள் வர்த்தகருமான கிம்புளா எல குணா எனப்படும் சின்னையா குணசேகரம் உள்ளிட்ட மூவர் சென்னையில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சுதந்திரதின ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(கொழும்பு)

அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சுகாதார விதிமுறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தேசிய சுதந்திர நிகழ்வுகள் நடத்தப்படுமென பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வில் மற்றும் மரியாதை அணிவகுப்பில் கலந்து கொள்ளும் அனைவரும் பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என்று தெரிவித்த அவர், இது தொடர்பில் எவரும் பயப்படத் தேவையில்லை.

சுகாதார பாதுகாப்பிற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்பு படையினர் சிலருக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தபோதும் இவர்களின் ஆரம்ப தொடர்பாளர்கள் அனைவரும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.



ஆசனங்களுக்கிடையில் இடைவெளி பேணப்பட்டுள்ளது. சகலரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிய தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை பொதுமக்கள் நேரடியாக வருகை தந்து பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி தேசியக்கொடியை ஏற்றும் சந்தர்ப்பத்தில் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்படும் என்றும் இம்முறை தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி எண்ணக்கருவிற்கு அமைய நாடளாவிய ரீதியில் மரநடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இது தொடர்பில் மாவட்ட, பிரதேச செயலாளர்களுக்கும் கிராம உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2123

**விபுசன்**

உலகத்துல கஷ்டமான விடயம் எதுன்னா...



நமக்கு யாராவது அட்வைஸ் பண்றப்ப வர்ற சிரிப்பை அடக்கிகிட்டு சீரியஸா மூஞ்சை வெச்சியிருக்குற மாதிரியே நடிக்கிறது தான்...

**சுதா**

ஆசிரியர்:-யானை, எறும்பு இரண்டுல எது பெரியது?



அப்படி உடனே சொல்லமுடியாது சேர்... பிறந்த திகதி சொல்லுங்க...

**சங்கரன்**


தனக்கு கிடைத்ததை உடனே அடுத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்கள் என்றால்...




அது வாட்ஸ்அப் மெசேஜாக மட்டும் தான் இருக்கும்...


**ரவி**

வீதியில் நான் கண்ட ஒரு அருமையான விழிப்புணர்வு பலகை...




**கரன்**

ஒரு காலத்தில செல்போனை நாம வச்சிந்தோம்...



இப்ப செல்போன் நம்மல வச்சிருக்குது...

**சஜீ**

ஒரு சாமானிய மனிதனுக்கு மிகப்பெரிய வேதனை என்னனா...




சம்பளம் வந்த அப்போவே ஒண்ணுமில்லாம காலியாகுறது தான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலமா சபை உடனடியாக தடை செய்யப்பட வேண்டும்

## ஞானசார தேரர் சீற்றம்



(கொழும்பு)

ஜம் இய்யதுல் உலமா சபையின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் தடை விதிக்க வேண்டும். இவரின் கடந்த கால செயற்பாடுகள் குறித்து முழுமையான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க சிறப்பு விசேட குழுவை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனாஅமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் புரையோடி போயுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து தொடர்ந்து பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளோம். உண்மைகளை குறிப்பிடுவதால் ஒரு தரப்பினரால் இனவாதிகள் என சித்திரிக்கப்பட்டுள்ளோம்.

பொதுபல சேனா அமைப்பினர் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எம்மீது முன்வைக்கப்பட்டன. ஆனால் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவம் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் எந்தளவிற்கு வலுப்பெற்றுள்ளது என்பதை வெளிப்படுத்தியது.

இதற்கு இதுவரையில் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும். இதுவரையில் காணப்பட்ட தவறை தற்போதைய அரசாங்கமாவது திருத்திக் கொள்ள வேண்டும் என்பதே பிரதான எதிர்பார்ப்பாகும். 69 இலட்ச மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே காணப்படுகிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்குவதற்கு உலமாக சபை பாரிய பங்களிப்பு செய்துள்ளது.

ஜோர்தான் நாட்டில் அரச சார்பற்ற அமைப்பு கடந்த வாரம் உலகில் பலம்வாய்ந்த முஸ்லிம் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளது. பெயர்ப்பட்டியலில் 11 ஆவது தடவையாகவும் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி உள்ளடக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டுமாயின் உலமா சபை தடை செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் இச்சபையினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் அடிப்படைவாத செயற்பாடுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிப்பு செய்துள்ளது.

ஆகவே இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாத விவகாரத்தில் கடந்த கால அரசாங்கம் செய்த தவறுகளை தற்போதைய அரசாங்கமும் தொடரக் கூடாது.

இது கவலைக்குரிய செயற்பாடாகும். அடிப்படைவாதத்துக்கு தீர்வு காணாவிடின் அது எதிர்காலத்தில் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலை விட பாரிய அழிவை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)


### போதைப்பொருளுடன் பெண் கைது

(கொழும்பு)

போதைப்பொருட்களுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, ஹங்வெல்ல பொலிஸாரால், முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபரான 22 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து 55 கிராம் ஹெரோயின், 35 கிராம் ஐஸ் மற்றும் 5 கிராம் கஞ்சா போதைப் பொருளும் கைப்பற்றப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## சிறுத்தைப் புலி நடமாட்டத்தால் ஹற்றன் மக்கள் அச்சம்



(ஹற்றன்)

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் குடாகம பகுதியில் இரவு நேரங்களில் சிறுத்தைப் புலியின் நடமாட்டம் காரணமாக பிரதேசவாசிகள் பெரும் அச்சத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியின் வீடுகளில் உள்ள சில நாய்களை அந்த சிறுத்தைப்புலி கடந்த சில நாட்களாக கொண்டு சென்றுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விட்டில் பூச்சிகள்

விட்டில் பூச்சிகள் இருக்கே.. அது விளக்குகளை நாடிவரும்.. எரிகின்ற விளக்கிலே விழுந்து செத்துப் போய்விடும். இந்த நிகழ்வு இருக்கே.. இது கவிஞர்களுக்குப் பயன்படுகின்ற ஒரு உதாரணம். அமர காதலுக்கு அடையாளச் சின்னமாக உன்னத உதாரணமாக இந்த விளக்கையும் விட்டில்பூச்சியையும் உருவகித்துப் பாடியிருக்கின்ற, பாடிக் கொண்டிருக்கின்ற கவிஞர்கள் ஏராளம். கவிஞர்களுடைய பார்வை அப்படி.

ஆனால் விஞ்ஞானிகளுடைய பார்வை வேறு மாதிரி. அவர்கள் விட்டில்பூச்சி ஏன் விளக்கிலே வந்து விழுகின்றது என்பதைப்பற்றி நிறைய ஆராய்ச்சியெல்லாம் செய்திருக்கின்றார்கள். ஏன் என்றால் இதிலே ஒரு சுவாரசியமான விடயம் உண்டு. அது என்னவென்றால்.. ஆண் பூச்சிகள் மட்டும் தான் இப்படி விளக்கை நாடி வருகின்றது. பெண் பூச்சிகள் வருவதில்லை. இதிலே உள்ள மர்மம் என்ன?

அதைக் கண்டுபிடிப்பதற்கு அரிஸ்ரோட்டில் காலத்திலே இருந்தே விஞ்ஞானிகள் முயற்சி செய்கின்றார்கள். இது சம்பந்தமாக முதன் முதலாக தீவிரமாக ஆராய்ச்சி செய்தவர். ஃப்ராஸ்ட் என்கின்ற அமெரிக்கர்.

19 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பருத்தியிலே உள்ள அந்துப் பூச்சியை (Colton Moth) கவனித்தார்.ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி வைத்தார். ஒரு மண்ணெண்ணெய் விளக்கையும் கொளுத்தி வைத்தார். அந்தப் பூச்சி இந்த இரண்டு வெளிச்சத்திலேயும் ஒரே அளவு கவரப்படுவதில்லை என்கின்ற உண்மையை அவர் கண்டு பிடித்தார்.

அது இரண்டுக்கும் வித்தியாசம் இருந்தது.அடுத்தபடியாக பிரெஞ்சு பூச்சியியல் நிபுணர் ஃபெபர் சில ஆய்வுகளைச் செய்தார்.ஒரு நாள் காலையிலே அகலமான இறக்கைகளைக் கொண்ட ஒரு பெரிய பெண் அந்துப் பூச்சியைப் பிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய ஆய்வகத்திலிருந்த ஒரு சாடிக்குள்ளே வைத்தார். அன்றைக்கு இரவு ஏராளமான ஆண் பூச்சிகள் அவருடைய ஆய்வகத்துக்குள்ளே படை யெடுத்துக் கொண்டு வந்துவிட்டது.

அவர் ஆச்சரியத்துடன் ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி எடுத்துக் கொண்டு அங்கே போனார். அங்கே ஆண் அந்துப் பூச்சிகள் பெண் அந்துப் பூச்சி இருந்த ஜாடியை சுத்திசுத்தி வந்து கொண்டிருந்தது.

எரிகின்ற மெழுகுவர்த்தியைக் கண்டதும் அதுமேல் பாய்ந்து இறக்கைகளாலே அடித்து அணைக்க முயற்சி செய்தது.

ஆண் அந்துப் பூச்சிகள் பெண் அந்துப் பூச்சியின் வாசனையால் கவரப்பட்டு ஆய்வகத்துக்குள்ளே வந்திருக்கலாம். ஆனால் மெழுகு வர்த்தியைக் கண்டதும் நிறைய பூச்சிகள் வெளிச்சத்தை நாடிவர ஆரம்பித்துவிட்டது.ஃபெபர் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார்.பெண் பூச்சி இங்கே இருக்கின்றது என்பதை ஆண் பூச்சிகள் எப்படிக் கண்டு பிடிக்கிறது. அவருக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது.பெண் பூச்சி வெளியிடுகின்ற பெரமோன் என்கின்ற காதல் மணப் பொருள் மட்டுமே ஆண் பூச்சிகள் கவரப்படுவதற்குக் காரணம் என்பதை அவர் நம்பவில்லை. பெண் பூச்சி உடம்பிலேயிருந்து ரேடியோ அலைகள் வெளிப்பட்டு ஆண் பூச்சிகள் கவரப்படுகிறதா? என்று கூட சோதித்துப் பார்த்தார். ஆனால் பெண் பூச்சிகள் உடம்பிலேயிருந்து ரேடியோ அலைகள் எதுவும் வெளிப்படவில்லை.

ஆனால் இப்பொழுது சமீப காலத்திலே அது சம்பந்தமாக நடந்த ஆய்வுகள் என்ன சொல்லுகின்றது என்றால் பெண் பூச்சியின் உடம்பிலேயிருந்து வெளிப்படுகின்ற ஏதோ ஒருவகைக் கதிர்கள் தான் ஆண் பூச்சிகள் கவரப்படுவதற்குக் காரணம் என்று பெபர் சந்தேகப்பட்டது சரியே என்று சொல்கின்றது.

எரிகின்ற மெழுகுவர்த்தியிலிருந்து சில தொலைக் கீழ்ச் சிவப்புக் கதிர்கள் வெளிப்படுகின்றது. அதே கதிர்களைப் பெண் பூச்சியும் வெளியிடுகின்றது.ஆண் அந்துப் பூச்சிகளை விளக்குக் கவர்வதற்கு இதுதான் காரணம்.அதனால் இனிமேல் விட்டில் பூச்சிகள் விளக்கிலே போய் விழுந்தால் அது எல்லாம் விபரம் தெரிந்துதான் அப்படிப் போய்விழுந்து உயிர்த்தியாகம் செய்கின்றது என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். விபரம் தெரியாமல் அப்படிப் போய் விழுந்து ஏமாந்து போகின்றது. அது தான் உண்மை.

எங்கள் ஆட்கள் கூட சில பேர் விபரமில்லாமல் மெழுகு வர்த்தியைக் கொளுத்திக் கொண்டு அலைவது உண்டு. ஒருத்தர் மெழுவர்த்தியைக் கொளுத்திக் கையிலே வைத்துக் கொண்டு இருட்டிலே எதையோ தேடிக் கொண்டிருந்தார். அங்கே மிகவும் நிறைய நேரமாக எதைத் தேடிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார்கள் வீட்டுக்கார அம்மா. திடீர் என்று கரண்ட் போய்விட்டால் . அது தான் கொளுத்தி வைக்கலாமே என்று இங்கேயிருந்த ஒரு மெழுகுவர்த்தியைத் தேடிக் கொண்டிருக்கின்றேன் என்றார் அந்த ஆள் அதைக் கையிலே வைத்துக் கொண்டே.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

16



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

1994.03.01 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் ஒரு மாநகர சபை, 3 நகர சபைகள், 36 பிரதேச சபைகள், வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை ஆகிய உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1998.04.03 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தபோதும் 1998.02.23 ஆம் திகதிய 1016/ 15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் மூலம் இந்த உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1999.04.03 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இவ் உள்ளூராட்சி சபைகளின் நடவடிக்கைகளுக்கான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கும் அந்நிறுவனங்களின் உரிய சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்குமுரிய தத்துவம் 1999.04.01 ஆம் திகதிய 1073/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை மூலம் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டது.

**1999 ஆம் ஆண்டில் 40 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் அச்சபைகளின் உரிய சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்குரிய தத்துவம் அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டது.**

வகை -2:-1997 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று 2001 வரை பதவிக்காலங்களை கொண்டிருந்த உள்ளூராட்சி சபைகள் (மொத்தமாக 238 உள்ளூராட்சி சபைகள்)

கொழும்பு மாவட்டம்:- 04 மாநகர சபைகள், 02 நகர சபைகள், 06 பிரதேச சபைகள். கம்பஹா மாவட்டம்:- 01 மாநகர சபை, 06 நகர சபைகள், 12 பிரதேச சபைகள். களுத்துறை மாவட்டம்:- 04 நகர சபைகள், 10 பிரதேச சபைகள். கண்டி மாவட்டம்:- 01 மாநகர சபை, 04 நகர சபைகள், 17 பிரதேச சபைகள். மாத்தளை மாவட்டம்:- 01 மாநகர சபை, 11 பிரதேச சபைகள். நுவரெலியா மாவட்டம்:- 01 மாநகர சபை, 02 நகர சபைகள், 05 பிரதேச சபைகள். காலி மாவட்டம்:- 01 மாநகர சபை, 01 நகர சபை, 15 பிரதேச சபைகள். மாத்தறை மாவட்டம்:- 02 நகர சபைகள், 12 பிரதேச சபைகள். அம்பாந்தோட்டை மாவட்டம்:- 02 நகர சபைகள், 09 பிரதேச சபைகள். குருநாகல் மாவட்டம்:- 01 மாநகர சபை, 01 நகர சபை, 17 பிரதேச சபைகள். புத்தளம் மாவட்டம்:- 02 நகர சபைகள், 10 பிரதேச சபைகள். அநுராதபுர மாவட்டம்:- 01 நகர சபை, 18 பிரதேச சபைகள். பொலநறுவை மாவட்டம்:- 06 பிரதேச சபைகள். பதுளை மாவட்டம்:- 01 மாநகர சபை, 02 நகர சபைகள், 14 பிரதேச சபைகள். மொனராகலை மாவட்டம்:- 10 பிரதேச சபைகள். இரத்தினபுரி மாவட்டம்:- 01 மாநகர சபைகள், 01 நகர சபை, 13 பிரதேச சபைகள். கேகாலை மாவட்டம்:- 01 நகர சபை, 10 பிரதேச சபைகள். மொத்தமாக 238 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1997.04.15 ஆம் திகதி ஆரம்பித்துள்ளதோடு அக்காலம் 2001.04.14 ஆம் திகதி முற்றுப்பெற உள்ளது. புதிய உள்ளூராட்சி சபைகளின் உருவாக்கங்களோடு மொத்தமாக உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 239 ஆகும். அவை 13 மாநகர சபைகள், 31 நகர சபைகள், 195 பிரதேச சபைகள் ஆகும்.

இதன்பின்னர் 2001.02.02 ஆம் திகதிய 1169/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் பதவிக்காலம் 2002.04.14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

வகை-3:-1998 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று 2002 வரை பதவிக்காலங்களைக் கொண்டிருந்த உள்ளூராட்சி சபைகள். (மொத்தமாக 17உள்ளூராட்சி சபைகள்).

யாழ்ப்பாணம் மாவட்டம்:- 01 மாநகர சபை, 03 நகர சபைகள், 12 பிரதேச சபைகள். கிளிநொச்சி மாவட்டம்:- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.மொத்தமாக 17 உள்ளூராட்சி சபைகள்.

1998.01.29 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி சபைகள், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை என்பவற்றை உள்ளடக்கிய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 1998.02.18 ஆம் திகதி ஆரம்பித்ததோடு அவற்றின் பதவிக்காலம் 2002.02.17 ஆம் திகதியுடன் முடிவடைய வேண்டும்.

வகை-4:- 1999 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி பதவிக்காலத்தை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகள் (மொத்தமாக 14 உள்ளூராட்சி சபைகள்).

இவ் வகைக்குள் கிளிநொச்சி மாவட்டத்தின் 2 பிரதேச சபைகளும், மன்னார் மாவட்டத்தின் 4 பிரதேச சபைகளும், வவுனியா மாவட்டத்தின் 4 பிரதேச சபைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 பிரதேச சபைகளும் அடங்கும். 1987 ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்பு காரணங்களினால் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்த முடியவில்லை. இதனால் உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஆரம்பிப்பது அடிக்கடி நீடிக்கப்பட்டு வந்தது. இவ் விதத்தில் இந்த 14 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 1999.2.18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டுமென 1998.01.17 ஆம் திகதிய 1010/ 4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

அதன் பின்னர் 1999.02.18 ஆம் திகதிய 1067/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த 14 உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக்காலம் 2000.02.18 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது. இது பின்னர் 2000.02.02 ஆம் திகதிய 1117/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதவிக்காலம் 2001.02.18 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டுமென பிரசுரிக்கப்பட்டது. இது 2001.01.12 ஆம் திகதிய 1165/ 11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதவிக்காலம் 2002.02.18 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

அதாவது 239 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 2002.4.14 இல் முடிவடைகின்றது. 17 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 2002.02.17 இல் முடிவடைகின்றது. 14 உள்ளூராட்சி சபைகளின பதவிக்காலம் 2002.02.18 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டும். 40 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டது.

**2002 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்கு முன் 239 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 2002.4.14 இல் முடிவடையும் நிலையிலும் 17 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 2002.02.17 இல் முடிவடையும் நிலையிலும் 40 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பிரதேச செயலாளர்களிடமும் 14 உள்ளூராட்சி சபைகளின பதவிக்காலம் 2002.02.18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டிய நிலையிலும் இருந்தன.**

### உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்- 2002

25 நிர்வாக மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் 18 மாநகர சபைகள், 37 நகர சபைகள் மற்றும் 256 பிரதேச சபைகள் (மொத்தம் 311) என்பன தொடர்பாக வேட்புமனுக்கள் 2002.01.18 ஆம் திகதி கோரப்பட்டன. அவ் அறிவித்தலுக்கமைய வேட்புமனுக்கள் கையேற்கப்படும் காலக்கெடு 2002.02.01 ஆம் திகதி முதல் 2002.02.08 ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டது. 311 உள்ளூராட்சி சபைகளில் 304 உள்ளூராட்சி சபைகள் சார்பாக 4394 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1339 வேட்புமனுக்கள் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டன. அதில் 148 வேட்புமனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நிராகரிக்கப்பட்டன.

தெரிவத்தாட்சி அலுவலர்களின் முடிவை எதிர்த்து 24 எழுத்தாணைகள் (ரிட்மனுக்கள்) மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அவற்றில் 10 உள்ளூராட்சி சபைகள் சார்பான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏனைய வேட்புமனுக்கள் தொடர்பான தெரிவத்தாட்சி அலுவலர்களின் முடிவுகளை ஏற்றுக் கொண்டு நிராகரித்தது. அக்குரஸ்ஸ பிரதேச சபை சார்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் அதியுயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பித்தமையால் அக்குரஸ்ஸ பிரதேச சபை சார்பாக நடத்தப்பட வேண்டிய வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

வேட்புமனுக்காலம் முடிவுற்றபொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் நகர பிரதேச சபை, போரதீவுப்பற்று பிரதேச சபை ஆகியவற்றிற்கான உறுப்பினர்களும் அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேச சபை உறுப்பினர்களும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(தொடரும்...)

## ஓய்வுபெற்ற வியட்நாம் தூதர் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான வெளிச் செல்லும் வியட்நாமிய தூதர் பாம் தி பிச் நொகோக் மற்றும் தூதரகத்தின் துணைத் தலைவர் டிரான் ட்ராங் தன் ஆகியோர் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பானது கொழும்பு. விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

வியட்நாமைப் போலவே இலங்கையிலும் பெரும்பான்மையான மக்கள் பௌத்த மதத்துடன் வலுவான உறவைக் கொண்டுள்ளனர் என்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான மத மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும்என்றும்அவர் அழைப்பு விடுத்தார்.

வேளாண்மை மற்றும் மீன் வளத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டது.

அத்துடன் வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையில் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மாணவர் பரிமாற்ற திட்டங்கள் ஏற்கனவே நடந்து வருகின்றன.

மேலும் அந்தச் செயல்முறையை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவமும் விவாதிக்கப்பட்டது.

பிரதமரின் செயலாளர் காமினி சேனாரத்தும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



### பாவம் போக்கும் கும்பாபிஷேகம்

(தொடர்ச்சி)

தங்கம், வெள்ளி, தாமிரம், மண் ஆகிய ஏதாவது ஒன்றில் கும்ப கலசம் செய்யப்பட்டிருக்கும். இந்தக் கும்ப கலசங்கள் எப்படி அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன. அப்படி அமைக்கப்படும் கும்பங்களைக் குறைவில்லாமல் மந்திரித்து அக்னியில் காட்டுவார்கள். பிறகு சிவப்பு மண் பூசி நூல் சுற்றுவார்கள். அந்தக் கலசத்தில் புனித நீரை நிரப்புவார்கள். கும்ப கலசத்தின் வாய்ப்பகுதியில் மாவிலை செருகி தேங்காய் வைப்பார்கள். அந்தக் கும்பத்துக்குள் தங்கம், வெள்ளி, நவரத்தினங்களைப் போட்டு வஸ்திரம் கட்டுவார்கள்.

நவதானியங்களைப் பரப்பி அதன் மீது கலசத்தை வைப்பார்கள். அருகில் தர்ப்பையும் வைப்பார்கள். எந்த மூர்த்திக்கு கும்பாபிஷேகம் நடக்கிறதோ அதன் உடலாக அந்த மூலமூர்த்தமாக இந்தக் கும்பம் கருதப்படும். தேங்காய் தலையாகவும் மாவிலை சிகையாகவும் கும்ப வஸ்திரம் தோலா கவும் சிவப்பு மண் இரத்தமாகவும் குடத்தின் உலோகம் மாமிசமாகவும் தர்ப்பை கூர்ச்சம் எலும்பாகவும் கும்பத்தில் சுற்றப்பட்ட நூல் நரம்புகளாகவும் கும்பத்திலிட்ட நவரத்தினங்கள் சுக்லமாகவும் கும்பத்தின் அடியில் பரப்பப்பட்ட நவதானியங்கள் ஆசனமாகவும் கருதப்படும்.

8.கலாகர்சணம்

மனித உடலாகக் கருதப்படும் கும்பத்தில் மூலமூர்த்தியின் சக்தியை இறங்கச் செய்வது கலாகர்சணம் அல்லது மூர்த்தியின் சக்தியை ஆகர்ஷித்தல் என்று பொருள். பிம்பத்தில் இருக்கும் சக்தி குறிப்பிட்ட காலம் வரை கும்பத்தில் இருக்கும் படி ஆகர்ஷித்தல் செய்வார்கள். பிறகு அந்தக் கும்ப கலசத்தை வேத பாராயணம் முழங்க சகல மரியா தைகளுடன் யாகசாலை பூஜைக்குக் கொண்டு வருவார்கள். அப்போது 8 சிதைகளிலும் தேங்காய் விடலை போட்டு கும்பத்துக்கு கற்பூரம் காட்டுவார்கள்.

9.யாகசாலை பூஜை

இறைசக்தி நிறைந்த கும்பத்துக்கு யாகசாலையில் வைத்து சிறப்பு பூஜைகள் செய்வார்கள். 6 கால பூஜை அல்லது 8 கால பூஜைகளுடன் யாகசாலை பூஜை நடைபெறும்.

10.அஷ்ட பந்தனம்

மூலமூர்த்தி இருக்கும் இடத்தில் அஷ்ட பந்தனம் செய்யப்படும். இது பீடத்தையும் பிம்பத்தையும் சேர்க்கும் ஒரு மருந்தாகும். சுக்கான், குங்குலியம், கொம்பரக்கு, காவி, செம்பஞ்சு, லிங்கம், வெள்ளை மெழுகு, வெண்ணெய் இந்த 8 மருந்துகளை அதற்குரிய எடையில் கலந்து இடித்து தயாரிப்பார்கள். மூலவர் தன் பீடத்தில் நிற்பது இந்த மருந்தின் உதவியால்தான். இம்மருந்து இறைசக்தி கொண்டது. அதனால்தான் கும்பாபிஷேகத்தை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் என்பார்கள்.

11.பிம்ப சுத்தி

பிம்பத்தில் உள்ள மூலவரின் சக்தி கும்பத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு மூலவர் சிலையில் உள்ள குறைபாடுகளை நீக்குவார்கள். இதற்குத்தான் பிம்பசுத்தி என்று பெயர்.

12.சபர்ஸாஹூதி

யாகசாலை ஹோமங்கள், அஷ்டபந்தன பணிகள் செய்து முடிக்கப்பட்டதும் மூலவிக்கிரகத்துக்கு மீண்டும் சக்தி ஏற்படுத்தப்பட வேண்டும். அதாவது பிம்பத்தில் இருந்து கும்பத்துக்கு வந்த சக்தியை மீண்டும் கும்பத்தில் இருந்து பிம்பத்தில் ஏற்ற வேண்டும். இதுதான் சபர்ஹூதி என்று அழைக்கப்படுகிறது. யாகசாலையில் உள்ள கும்பத்தில் இருந்து விக்கிரகத்தை தங்கக் கம்பி, வெள்ளி கம்பி அல்லது தர்ப்பை கொண்டு இணைப்பார்கள். இந்த இணைப்பு மூலம் சக்தி இடம்மாறும். தமிழில் இதை நாடி சந்தனம் என்பார்கள்.

13.கும்பாபிஷேகம்

எல்லா திருப்பணிகளும் முடிந்த பிறகு குறிப்பிட்ட தினத்தன்று கும்ப கலச நீரை விக்கிரகத்துக்கும் விமானம் மற்றும் கோபுரங்களில் அபிஷேகம் செய்வார்கள். இதன்மூலம் மூலவர் சிலை முழு இறை சக்தியை பெற்று துடிப்புள்ளதாக மாறும். இதையடுத்து மூலவர் சிலைக்கு பூர்ணாபிஷேகம் செய்து நைவேத்தியம் படைத்து 16 வகை ஆராதனைகள் செய்வார்கள்.

இதனால் மூலமூர்த்தி திருப்தி அடைவார். அதன்பிறகு மண்டலாபிஷேகத்தின் போது நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு வந்தால் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட புண்ணியம் கிடைக்கும். மூன்று கும்பாபிஷேகத்தை யார் ஒருவர் காண்கிறாரோ அவர் பாவங்கள் விலகி விடும் என்பது ஐதீகமாகும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## தடம் புரண்டது ரயில்

(களுத்துறை )

களுத்துறை தெற்கு ரயில் நிலையம் அருகே ரயிலொன்று நேற்றுக் காலை தடம் புரண்டுள்ளது.

களுத்துறையிலிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த ரயிலொன்றே இவ்வாறு தடம்புரண்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் கரையோர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (நி-4)

## நெவில் பெர்னாண்டோவுக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தெற்காசிய நிறுவன நிறுவுநர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

ஆரம்பத்தில் அவர் அவரது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தற்போது அவர் ஐ.டி.எச்.வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

## மேலும் 289 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(களுத்துறை )

கொவிட் தொற்று காரணமாக பல்வேறு நெருக்கடிக்குள்ளான 289 இலங்கையர்கள் நேற்று புதன்கிழமை அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.


வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை திருப்பி அனுப்புவதற்கான அரசாங்கத்தின் சிறப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். நாட்டை வந்தடைந்த இவர்கள் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் இலங்கை இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 400 | 330 | 350 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 800 | 800 |
| தக்காளி | 180 | 180 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 90 | 100 |
| கரட் | 180 | 250 | 240 | 240 |
| பூசணி | 140 | 160 | 140 | 200 |
| புடோல் | 200 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 100 |
| சின்ன. வெங்காயம் | 400 | 450 | 400-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80-100 | 100 |
| பாகற்காய் | 300 | 280 | 250 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 250 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 250 |
| லீக்ஸ் | 100 | 150 | 140 | 150 |
| பீற்றூட் | 250 | 230 | 220 | 280 |
| கறிமிளகாய் | 300 | 380 | 330 | 480 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 200 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | — | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 110 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 270 | 350 |
| முள்ளங்கி | 150 | 180 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | — | 100 |




# பீர்பாலின் புத்திசாலித்தனம்



(நேற்றைய தொடர்ச்சி)

குடம் நிறையுமளவிற்கு பூசணிக்காய் பெருத்ததும், பூசணிக்காயைத் தவிர மற்ற வைக்கோல், கொடி, காயின் காம்பு எல்லாவற்றையும் கத்தரித்து விட்டார் பீர்பால்.

இப்போது அந்தக்குடத்தை அக்பரிடம் காட்டினார் பீர்பால். அக்பருக்கு ஆச்சரியம்.

குடத்தின்வாயோ உள்ளே இருக்கும் பூசணிக்காயை விட மிகவும் சிறியது. இதனுள் இவ்வளவு பெரிய பூசணிக்காயை எப்படி நுழைத்தாய்?

பீர்பால் அதை விளக்கி விட்டு, அந்தப் பூசணிக்காய் குடத்தை அப்படியே காபூல் அரசனுக்கு, அதிசயம் என்று அனுப்பச் சொன்னார்.

அக்பர் தூதன் மூலமாக ஒரு கடிதத்தையும் அந்தக் குடத்தையும் அனுப்பினார்.

கடிதத்தை காபூல் அரசன் பிரித்து படித்தார். அதில் "நீங்கள் கேட்டது போலவே ஒரு குடம் அதிசயத்தை அனுப்பியிருக்கிறேன்" என எழுதியிருந்தார்.

குடத்தின் மேல் இருந்த உரையை பிரித்தார் காபூல் அரசன்! அவரால் அதை நம்ப முடியவில்லை. காரணம் குடத்தின் வாயோ சிறியது.

அதற்குள் எப்படி பெரிய பூசணிக்காய் வைத்தார் என்று அவருக்கு புரியவில்லை. அன்று இரவு முழுவதும் இதையே நினைத்துக்கொண்டு இருந்தார்.

அடுத்த நாள் காபூல் அரசன் விஜய நகரம்புறப்பட்டார்.

காபூல் அரசன் இரண்டு நாட்களுக்கு பின்னர் விஜய நகரத்தை அடைந்தார். அவர் அக்பரிடம் சென்று விசாரித்தார்.

அதற்கு அக்பர் இதை நான் சொல்வதை விட பீர்பால் சொன்னால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்.

வேலையாட்களிடம் பீர்பால் பற்றி வினவினார் அக்பர். அதற்கு அவர்கள் பீர்பால் பயிற்சி குடத்தில் இருப்பதாக கூறினர்.

சிறிது நேரத்திற்கு பிறகு அக்பர் மற்றும் காபூல் அரசன் இருவரும் பயிற்சி குடத்திற்கு சென்றனர். அங்கே பீர்பாலை சந்தித்தனர்.

பீர்பாலும் அதை எவ்வாறு செய்தான் என்று விளக்கினார். அதைக் கேட்ட காபூல் அரசன் பீர்பாலுடைய புத்திக்கூர்மையை எண்ணி வியந்தாராம்.

(முற்றும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## காதலும் கனவும்




இருபது நாட்கள் தொடர்ச்சியாக நடந்த போரில் ஹஸ்தியின் படைகளைக் காட்டிலும் பன்மடங்கு பலம் பெற்றிருந்த அலெக்சாண்டரின் படைகள் வெற்றி பெற்றன.

நான் சந்தித்த வீரர்களுள் ஹஸ்திக்கு முக்கியமான இடம் உண்டு என்றார் அலெக்சாண்டர்.

இதுநாள்வரை வீரர்களை மாத்திரமே சந்தித்து வந்த அலெக்சாண்டர் புதிதாக ஒரு வீராங்கனையைப் போர்க்களத்தில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவள் பெயர் கிருபா.

கிருபாவின் படைகளைச் சமாளிக்கத் திணறியது மாசிடோனியப் படை. காரணம் தட்ப வெப்பச் சூழல். அது மாசிடோனிய வீரர்களுக்குப் பொருத்தமானதாக இல்லை. ஆனாலும் எண்ணிக்கை காரணமாக கிருபாவின் படைகளைத் துவம்சம் செய்துவிட்டு முன்னேறியது மாசிடோனியப் படை.

அடுத்தடுத்து சில சிற்றரசர்களை எதிர்கொண்டு வெற்றி பெற்றுவிட்டு இந்தியாவை நோக்கி வேகமாக முன்னேறிச் சென்றார் அலெக்சாண்டர்.

எதிரே வந்தவர்களை எல்லாம் அநாயசமாகச் சூறையாடி முன்னேறியது மாசிடோனியப் படை. சந்தோசம். முன்னேற்றம்.

தட்சசீலம் நகருக்குள் நுழைந்தது மாசிடோனியப் படை. மிகவும் செழிப்பான பூமி. ரிக், யசூர், சாம வேதங்கள், சாஸ்திரங்கள் ஆகியவற்றைக் கற்றுத் தருகின்ற பெரிய பல்கலைக் கழகம் ஒன்று இங்கே இருக்கிறது. இந்தத் தேசத்து மன்னனின் பெயர் அம்பி.

அரசியல் வல்லுநர் சொல்லிக்கொண்டே வர அலெக்சாண்டர் தலையசைத்துக் கொண்டே வந்தார்.

தனது பரிவாரங்களுடன் அலெக்சாண்டர் வந்துள்ள செய்தி தட்சசீல மன்னன் அம்பிக்குப் போனது. அதிர்ச்சியில் நடுநடுங்கிப் போனான் அவன்.

என்னது உலகத்தையே வென்ற மாவீரன் அலெக்சாண்டர் தட்சசீலத்துக்கு வருகிறாரா? நாம் என்ன செய்யப் போகிறோம்? ஏதாவது எதிராகச் செய்தால் உயிருக்கே உத்தரவாதம் இருக்காதே. நெஞ்சு படபடத்தது அம்பிக்கு.

(தொடரும்)

மொட்டாக முளைத்தது மலர்ந்தே தீரும்; விடா முயற்சி கொண்டவனுக்கு வெற்றி கிடைத்தே தீரும்.
- சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரை...

சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திய மகாத்மா காந்தி பாரத தேசத்துக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தால் காந்தியடிகளுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்று ஏங்கிப்போன ஆங்கிலேயர்கள் பாரத பூமிக்குச் சுதந்திரத்தை வழங்கி காந்தியடிகளின் அகிம்சைப் போராட்டத்துக்கு உன்னதமான மதிப்பை அளித்தனர்.

ஆக, இந்தியாவுக்கான சுதந்திரம் காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டத்தால் கிடைத்தது என்று கூறுகின்ற அதேநேரம் மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மதித்ததன் காரணமாகவும் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது எனக் கூறுவதில் மிகுந்த நியாயம் இருக்கவே செய்கிறது.

ஆக, அகிம்சை வழிப் போராட்டத்தின் வெற்றி என்பது ஆட்சியாளர்கள் அதற்கு வழங்குகின்ற மரியாதையிலேயே தங்கியுள்ளது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் அகிம்சை வழிப் போராட்டத்துக்கு சிங்கள ஆட்சியாளர்கள் மதிப்புக் கொடுத்திருப்பார்களாயின், எங்கள் நாட்டின் இன்றைய நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும்.

என்ன செய்வது தமிழ் மக்களின் அகிம்சை வழிப் போராட்டங்களை கொச்சைப்படுத்துவதிலும் அதனை அடக்குவதிலுமே சிங்கள ஆட்சித் தரப்பு தீவிரம் காட்டி வருகிறது.

அதனால் இன்றுவரை இலங்கை நிம்மதியை இழந்த நாடாகவே இருக்கிறது.

இதை நாம் கூறும்போது அகிம்சை வழிப் போராட்டத்தை சிங்கள ஆட்சித் தரப்புகள் கொச்சைப்படுத்துமெனில், தொடர்ந்தும் அகிம்சை வழிப் போராட்டத்தை மேற்கொள்வதால் ஆகப்போவதென்ன என்ற கேள்வி உங்களில் பலரிடம் ஏற்படலாம்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் மிக நுணுக்கமாகப் பார்க்க வேண்டும்.

அதாவது இலங்கைத் தமிழர்களின் விடயம் இன்று எல்லை கடந்து உலக அரங்கில் பேசுபடுபொருளாக உள்ளது.

அதிலும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் விவகாரம் இலங்கையின் கௌரவத்தை சர்வதேச அளவில் களங்கப்படுத்தியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்த விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் இன்னமும் தனது நிலைப் பாட்டை தெரிவித்து நிற்கிறது.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்படாவிட்டால், இலங்கை மீது எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது பற்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிகத் தெளிவாக அறிக்கைப்படுத்தியுள்ளார்.

ஆக, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நடத்துகின்ற அகிம்சை வழிப் போராட்டங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் என் பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் வன்முறையின்றி, சண்டையின்றி, அகிம்சை வழியில் – சமாதான முறையில் தமது உரிமைக்காகக் குரல் கொடுப்பதை சர்வதேச சமூகம் மனிதநேயத்துடன் பார்க்கும் என்பதும் ஏற்புடைய உண்மை.

ஆக, பொத்துவில் முதல் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்படும் அகிம்சை வழிப் போராட்டம் உச்சம் பெற தமிழ் மக்களும் முஸ்லிம் சகோதரர்களும் பேராதரவு வழங்க வேண்டும்.

## இலங்கைக்கெதிரான பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறு

# மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(ஜெனிவா)

**இலங்கையின் மனித உரிமை விவகாரங்களை ஆராய்வதற்காக புதிதாக ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இந்த மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடரில் அந்தத் தீர்மானத்தை முன்வைக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகள் மற்றும் சிறுபான்மை இன மக்களை இலங்கை அரசாங்கம் பாதிப்புறச் செய்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லக்கூடிய பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

நாட்டில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறியமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பயணத் தடை விதிக்க வேண்டும் எனவும் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் போது, அதனை மனித உரிமை வழிகாட்டல்களுக்கு அமைய வழங்குமாறும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி-4)

# அடக்குமுறையை உடைத்தெறிந்து பொலிகண்டி வரை செல்வோம்

(கொழும்பு)

தடுத்து நிறுத்த அடக்குமுறையை கையாண்டாலும் பொலிகண்டி வரை நிச்சயம் செல்வோம் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொட்டும் மழையிலும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டம் நேற்று புதன் கிழமை ஆரம்பமாகியது.

இந்நிலையில் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனவே அனைத்து தமிழ் உறவுகளையும் தொடர் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அடக்குமுறைகள், வடக்கு-கிழக்கின் நில அபகரிப்புக்கள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்தோடு அனைத்து விதமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்க்கும் முகமாகவும் அகிம்சை முறையில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, ஈவினை, அச்செழு, மாசிவன், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றெட், திண்ணை Organic பண்ணை, பத்தானை, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி இந்துமயானம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## மாணவர்களின் மன ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்- பீரிஸ்

(கொழும்பு)

குழந்தையின் ஆரம்ப ஆண்டுகளில் அவர்களின் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவர்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமாக அமையும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே மாணவர்கள் உணர்ச்சி ரீதியாக ஆரோக்கியமாக இருக்க பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இதனை ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் நேற்று கருத்து தெரிவிக்கும் போது,

தியானம் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். (நி-4)


# சத்திய தரிசனம்



## அன்புக்கு கிடைக்கும் பரிசு

- தோட்டத்தில் மண்டிக் கிடக்கும் செடி, கொடிகளை வெட்டி சீர்படுத்தி அழகுபடுத்துவது போல, மனதையும் தியானப் பயிற்சியால் சீர்படுத்த வேண்டும்.
- கோபம் பல தீய விஷயங்களை மனதில் தூண்டிவிடும். பல ஆண்டுகளாக கிடைத்த ஆற்றலை கணநேரத்தில் இழக்கச்செய்து விடும்.
- மன பலவீனமே கோபமாக வெளிப்படுகிறது. அமைதி, பொறுமை, பணிவு போன்ற நற்குணங்களை மனதில் நிரப்பி விட்டால் பலவீனம் காணாமல் போய்விடும்.
- இறைவனை அறிய வேதம் பயிலத் தேவையில்லை. எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டினாலே, இறையருள் என்னும் பரிசு பெறலாம்.
- அடுத்தவரிடம் அன்பு காட்டாவிட்டால் உன்னையே நீ நேசிக்க முடியாது. அடுத்தவரைத் துன்புறுத்தும் மனிதன் தனக்குத் தானே துன்பம் இழைத்துக் கொள்கிறான்.
- பிறர் வற்புறுத்தலுக்காக இல்லாமல் மனதிலிருந்து தொண்டாற்றும் சிந்தனை தானாக வர வேண்டும்.

# இறக்குமதிக்கு அனுமதி



(கொழும்பு)

செரமிக் உற்பத்திகள் தொடர்பில் நிலவும் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தி புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக இலங்கை ஏற்றுமதி - இறக்குமதி துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.


இதனை கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு பல்வேறு பொருட்கள் இறக்குமதி செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் செரமிக் உற்பத்தியும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இரு நாட்டு உறவுகள் மேலும் வலுப்படும்

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் மோடி உறுதி

(கொழும்பு)

**மொழி, மதம் மற்றும் கலாசாரத்தின் அடிப்படையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நிலவுகின்றது எனவும், கடந்த ஆண்டு, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் கூட்டாக செயற்பட்டதன் மூலம் இரு தரப்பு உறவுகள் வலுப்பட்டுள்ளன எனவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.**



இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துச் செய்தியை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக அனுப்பி வைத்துள்ள இந்த வாழ்த்துச் செய்தியில் இரு நாடுகளுக்கும் இடையில் ஆழமாக வேரூன்றியுள்ள உறவு குறித்து மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் இரு நாட்டு மக்களினதும் முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக மேலும் உறுதியுடனும் பங்களிப்புடனும் இணைந்து செயற்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு நடுவிலும் இரு நாட்டு உறவுகள் அபிவிருத்தி, வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் முக்கிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளன எனவும் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஐ.ம.கூ. இம்மாதம் ஸ்தாபிக்கப்படும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியை சுற்றி அமைக்கப்படும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற புதிய அரசியல் கூட்டமைப்பின் யாப்பு இம்மாத இறுதிக்குள் முடிவு செய்யப்பட்டு, அதிகாரபூர்வமாக இந்த புதிய தேசிய கூட்டணி ஸ்தாபிக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஆகியோர் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் உத்தேச யாப்பு, எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள், கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட உள்ளூராட்சிமன்றங்களை ஐக்கிய மக்கள் கூட்டணி கைப்பற்றுவது தொடர்பான வியூகம், மாகாண சபை தேர்தல்கள் தொடர்பான வியூகம், நாட்டின் இன்றைய அரசியல் நிலவரம் ஆகியவை தொடர்பில் இதன்போது இருவரும் கலந்துரையாடினர். (நி-4)

# மயக்க மருந்து கொடுத்து பேருந்தில் கொள்ளை

(கொழும்பு)

பேருந்தில் பயணித்த இரு பெண்களுக்கு மயக்க மருந்து வழங்கி, அவர்களின் பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்த இளைஞனை கைதுசெய்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு செல்லும் பேருந்தில் பயணித்த குறித்த இரு பெண்களுடன், சந்தேக நபர் தன்னை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளார். பின்னர் அவர்களுக்கு மயக்கத்தை ஏற்படுத்தும் ஒரு மருந்து அடங்கிய உணவை வழங்கியுள்ளார்.

உணவை எடுத்துக் கொண்ட இரு பெண்களும் மயக்கமடைந்த பின்னர் அவர்களிடமிருந்து 2 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சாலியாவேவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

# கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

நிலக்கண்ணிவெடி அகற்றும் சர்வதேச மற்றும் உள்ளூர் வனங்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையேயான வருடாந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சில் நேற்று முன்தினம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பில் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் கீர்த்தி ரஞ்ஜித் அபேகுணவர்தன மற்றும் மெக் நிறுவனம், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம், டேஸ் நிறுவனம் மற்றும் சார்ப் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் கையொப்பமிடப்பட்டது.

இது தொடர்பில் அமைச்சின் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கேற்ப கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் செயற்படுத்தலின் மூலம் நிலக்கண்ணிவெடி அகற்றும் வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் திட்டம் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் நேரடி மேற்பார்வையில் அண்மையில் கிளிநொச்சி, முகமாலையில் நடைபெற்றது. 2022 ஆம் ஆண்டுக்குள் நிலக்கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றும் என்று அரசு நம்புகிறது. (நி-4)

# அக்கிரஸ்சீவ் போய்ஸ் ஆட்டத்தில் அடங்கியது கொக்குவில் ஸ்ரார்









ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணம் 2021 தொடரின் 4 வது தகுதிகாண் போட்டி கடந்த 31 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் அக்கிரஸ்சீவ் போய்ஸ் கொக்குவில் ஸ்ரார் அணியை 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று முதல் வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 93 ஓட்டங்களை பெற்றது.

94 வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அக்கிரஸ்சீவ் போய்ஸ் அணி 17.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 94 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற அக்கிரஸ்சீவ் போய் அணிக்கு 2500 ரூபாய் பணப்பரிசும் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனன்தனுக்கு 1000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது. (4)

## கறுப்புத் துணி...

போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்கிறது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக குறித்த போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ம-3)

## தமிழரின் போரா...

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மாபெரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அட்டாளைச்சேனையில் முஸ்லிம்களும் பேரணியில் இணைந்து கொண்டனர்.

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அத்துமீறல்கள், பௌத்தமயமாக்கல் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்திய இந்த மாபெரும் போராட்டம் அடக்குமுறையை தாண்டி நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

இதன்படி பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஆலையடிவேம்பில் இருந்து அட்டாளைச்சேனை ஊடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்றபோது அதற்கு ஆதரவாக பெருமளவான முஸ்லிம்கள் இணைந்து கொண்டதுடன் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நசீரும் இணைந்து கொண்டார்.

இதன்போது, சடலம் எரிப்பு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழர்களின் நில ஆக்கிரமிப்பினைத் தடுத்து நிறுத்து உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலான கோசங்களும் எழுப்பப்பட்டன. (ம-3)

## மன்னாரில்...

பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் சுகாதார பணி உதவியாளராக கடமையாற்றிய அடம்பன் பகுதியைச் சேர்ந்த ரி.எம்.சல்மான் (வயது-29) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிலங்குளம் பள்ளமடு பிரதான வீதியூடாக வந்த கனரக வாகனமும் அடம்பனில் இருந்து மன்னார் வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயம் அடைந்த குறித்த இளைஞன் அடம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார். (ம-3,285)

## யாழில் இன்று...

தாக்கல் செய்த விண்ணப்பங்களுக்கே இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்த தடை உத்தரவு பெறப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கோவிட் - 19 சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்தனர்.

தமிழின அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் நேற்றுக் காலை பொத்துவிலில் ஆரம்பமாகி பொலிஸாரின் தடையை மீறி நடைபெற்றது. எதிர்வரும் 6ஆம் திகதி சனிக் கிழமை பொலிகண்டியை வந்தடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## அகிம்சை...

போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அதற்குத் தடை கோரி சுன்னாகம் பொலிஸார் தாக்கல் செய்த தடை உத்தரவு விண்ணப்பத்துக்கு சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிக்கையைக் கோரி நாளை வரை ஒத்திவைத்து மல்லாகம் நீதவான் நீதிமன்றம்.

அத்துடன், அச்சுவேலி மற்றும் காங்கேசன்துறை பொலிஸார் தாக்கல் செய்த தடை உத்தரவு விண்ணப்பங்களையும் நாளை வெள்ளிக்கிழமை பரிசீலனைக்கு எடுக்கவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் தவணையிட்டது. (ம-3,33)

## தமிழர்களின்...

முதல் பொலிகண்டி வரையான மூன்று நாள் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இறுதியாக மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியில் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில், போராட்டம் ஆரம்பமாகியுள்ள நிலையில் பல்வேறு பகுதிகளில் திடீர் வீதித் தடை சோதனைச் சாவடிகள்

அமைக்கப்பட்டு, வீதித் தடையை கடப்பவர்கள் வழி மறிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

பொத்துவில் தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசத்தில் கன மழை பெய்தபொழுதிலும் அனைவரும் நனைந்த வண்ணம் பேரணியில் பங்கேற்றனர்.

த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், த.கலையரசன், பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.சிறிநேசன், சீ.லோகேஸ்வரன், சிவில் தலைவர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (ம-3)

## மன்னார் மாவட்...

நிலையில் குறித்த பேரணி மன்னார் மாவட்டத்திற்குள் நுழைய மன்னார் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா நேற்றைய தினம் புதன்கிழமை தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பகுதிக்குள் குறித்த பவனியானது உள் நுழைவதையும் எதிர் வருகின்ற சுதந்திர தினத்தையும் அல்லது இன ஒற்றுமையை குழப்பு கின்ற வகையிலும் இன முரண்பாட்டை தோற்றுவிக்கின்ற வகையிலும் ஒழுங்கமைக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் அதற்கான ஏற்பாடுகள் மன்னார் மாவட்டத்திற்குள் செய்யக்கூடாது என்ற தடையுத்தரவினை கோரி 14 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்து கட்டளையினை பெற்றுள்ளனர்.

இத்தடை உத்தரவானது நேற்று 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டளையானது இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, யாழ் மாநகர சபை மேயர் மணிவண்ணன் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 14 நபர்களுக்கு எதிராக இவ்வாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3,285)

## ஆறு...

நகரிலுள்ள நகைக் கடைகளை தொகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை 7 மணியளவில் வீட்டு உரிமையாளர் பாடசாலைக்கு பிள்ளையை விடச் சென்று திரும்பியபோது, வீடு உடைத்து நகைகள் திருடப்பட்டிருந்தன.

அதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அதுதொடர்பில் தகவலைப் பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான அணியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது சந்தேகநபர் நகைகளை விற்பனை செய்ய யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடைகளில் நடமாடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அங்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர். சந்தேக நபரிடமிருந்து 41 தங்கப்பவுண் நகைகளும் 2 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார் என்று மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் நாளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் கூறினர். (ம-3,33,101)


### தன நிதானய
திகதி - 2021.02.03
சீட்டிழுப்பு இலக்கம் - 424
E 19 25 43 67
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/02/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1093
வெற்றி இலக்கங்கள்
A 7 8 8 3 8 3

### கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2682
வெற்றி இலக்கங்கள்
T 18 31 69 76

### மஹஜன சம்பத
திகதி 2021/02/03
சீட்டிழுப்பு இலக்கம் 4387
F 3 4 0 7 0 4

### மெகா பவர்
திகதி 03/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0754
L 26 03 08 35 43

### சசெர
சீட்டிழுப்பு வாரம் 049
சீட்டிழுப்பு திகதி 03.02.2021
வெற்றி இலக்கங்கள் 33 39 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 24,92,740/=

### அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1183
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 03.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 104,783,640
வெற்றி இலக்கங்கள் 40 51 61 65 Z

### சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3513
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 03.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,952,134
வெற்றி இலக்கங்கள் 05084873 M

### ஷா (சுப்பர் ஜக்பொட்)
சுப்பர் ஜக்பொட் 2,805,597/=
திகதி: 03.02.2021
வெற்றி வாரம்: 3064
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 18 24 54 58 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,904,640

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1357 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 03/02/2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் F 10 46 74 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,788,452/=

### ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1730
சீட்டிழுப்பு திகதி 03.02.2021
வெற்றி இலக்கங்கள் 09 18 23 49 M
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 21,301,284
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

**விற்பனைக்கு**

Yamaha Mate 50 Japan மற்றும் Ladies Hero Honda (120 CC) போன்ற வகை மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. (5519)

**077 203 0309**



**தேவை**

சுன்னாகத்திலுள்ள புகழ்பெற்ற புத்தகசாலையில் பணிபுரிய பெண் வேலையாட்கள் தேவை. சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும். (C-1348)

**076 749 0219**



**அண்ணா** EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1331)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1336)

0768226240 DHL


# இலங்கையை ஆள்வதற்கு கோட்டாபய தகுதியற்றவர்

## தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அண்மைக்காலமாக மக்களின் நகைப்புக்குள்ளாகி வருகின்றார். உண்மையில் நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு அவர் தகுதிவாய்ந்தவரல்லர். மாறாக இராணுவ நடவடிக்கைகளுக்கும் இராணுவத்தினருக்கும் கட்டளையிடுவதற்குமே பொருத்தமானவர்."

- இவ்வாறு தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வக்கமுல்லே உதித்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கென ஜனாதிபதியால் விசேட ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக் குழு பல்வேறு தரப்பினரையும் அழைத்து, அவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்று விசாரணைகளை முன்னெடுத்தது.

பின்னர் அது குறித்த அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது. அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கும் ஜனாதிபதி விசேட குழுவொன்றை நியமித்தார். அதன் இறுதி அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டு சில நாட்களுக்குள்ளாகவே, ஜனாதிபதி மேலுமொரு அதிவிசேட ஆணைக்குழுவை நியமித்தார்.

அந்தவகையில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவும் மக்களின் நகைப்புக்குரிய ஒன்றாகவே மாறியிருக்கின்றது" என்றார். (ம-03)

# கொரோனாத் தொற்றால் நேற்றும் இருவர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 332 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)


**தவறவிடப்பட்டுள்ளது**

02.02.2021 அன்று 12.50 மணியளவில் புறப்பட்ட யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு பேருந்தில் பெறுமதிமிக்க நகைப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5520)

**076 834 1669, 071 376 0627**


# 146 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இன்றைய தினம் 146 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.(ம-03)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



**மணிவிழா** நாயகியை பணிநயந்து வாழ்த்துகின்றோம்



திருமதி

**கமலாதேவி குகானந்தராசா**

[( Spl. Trd. Home Economic) SLTS-1 ]

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (மனைப்பொருளியல்), வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

சேவை விபரம்

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் - ஆசிரியர் (1982- 1985)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (1985 - 1986)

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி - ஆசிரியர் (1987-1991)

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் -ஆசிரியர் (1991-1998)

கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் -ஆசிரியர் (1998 - 1999)

கிளி/ஜயனார்புரம் அ.த.க.பா. -ஆசிரியர் (2000 - 2003)

கிளி/ஸ்கந்தபுரம் இல-2 அ.த.க.பா. -ஆசிரியர் (2003- 2006)

கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் -ஆசிரியர் (2007 - 2010)

கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா. -ஆசிரியர் (2010- 2010)

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் -ஆசிரியர் (2010 - 2013)

வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி. - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (2014- 2021)

கல்வித் துறையில் முப்பத்தியிரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் ஏழு ஆண்டுகள் எம்மோடு இணைந்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் மகத்தான பணியாற்றி (03.02.2021) நேற்றைய தினம் ஓய்வு பெற்றுள்ள மணிவிழா நாயகியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-1351)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.



**இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவுகள்**



பிறப்பு 12.01.1985

இறப்பு 27.01.2019

திருமதி

**பிருந்தா குலதீபன்**

[(தாதிய உத்தியோகத்தர் - மந்திகை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)]

ஆண்டு இரண்டுகள் ஆனதோ
எங்கள் அன்புச் செல்லமே
உன்னை அழகாகப் படைத்த இறைவன்
உன் உயிரை அழகாக்க மறந்தானோ?
உன் அன்பு மகள் இங்கே
உன் அழகிய முகத்துடன் இருப்பதைக் காண கிடைக்கவில்லையே...
நாம் மௌனமாக இருப்பதால்
மறந்து விட்டோம் என்று நினைக்காதே!
மரணமே வந்தாலும் மறக்கமுடியாது
உன் உறவை எங்கள் ஆருயிர்ச் செல்லமே....

உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

(C-1327)

என்றும் உன் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்

மாசேரி, வரணி.

கணவன், மகள், அம்மா, அக்காமார், மைத்துனர்கள், பெறாமக்கள்.


இப்பத்திரிகை வலம்புரி அன்னோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.